விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆனி 22 றம்ழான் 1 இதழ் 143

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 6—7—82

ஐலண்ட்
இன்ஸ்ரிரியூட்ஸ்
[விசாரை எதிரில்]
58, ஸ்ரான்லி வீதி – யாழ்ப்பாணம்
A/L 83
(கலை, வர்த்தகம்)
புதிய சனி, ஞாயிறு
வகுப்புகள்
ஆரம்பம்:– 10-7-82
சனி மு. ப. 7 மணி.
3764

## இலங்கையர் பற்றிய தகவல்

(கொழும்பு)

லெபனானில் வேலை செய்துகொண்டிருந்த இலங்கையர் பற்றிய தகவல்களை இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

லெபனானில் சுமார் 500 இலங்கை இளைஞர்கள் வேலை செய்துகொண்டிருந்தனர். சமீபத்தில் பன்னிரண்டு இளைஞர்கள் இங்கு திரும்பி வந்தனர். மிகுதிப்பேர் திரும்பிவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# தமிழ் ஈழ விடுதலை மன்றம்

# நியூயோர்க் மகாநாட்டில் அமைக்கப்பட்டது!

## திட்டங்களை விரைவுபடுத்த எண்மர் குழு நியமனம்

### வைகுந்தவாசனும் குழுவில் இடம்பெற்றுர்

(ஐ. பி. எஸ். செய்திச் சேவை)

தமிழ்ஈழவிடுதலை மன்றம் (கவுன்சில்) அமைப்பது) என்று, நியூயோர்க்கில் நடைபெற்ற இரண்டுநாள் தமிழீழ மகாநாட்டில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழவிடுதலை மன்றத்தின் தலைமையகம், நியூயோர்க்கில் செயல்படும் என்றும் மன்றத்தின் செயல்திட்டங்களை வரையவும், நிறைவு செய்யவும் எண்மர் கொண்டகுழுவொன்றை அமைப்பது என்றும் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஈழ விடுதலை மன்றம் அமைக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தைத் திரு. பெனடிக்ற் முன்மொழிய திரு எஸ். சந்திரகாசன் வழிமொழிந்தார். இத்தீர்மானம் நூற்று மூன்று வாக்குகள் பெற்று, நிறைவேற்றப்பட்டது.

### எண்மர் குழு

நியூயோர்க்கிலுள்ள நியூட் எனும் நகரில் நடைபெற்ற இரண்டு நாள் மகாநாட்டின் முடிவிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் ஈழ விடுதலை மன்றத்தை அமைப்பதற்கும் செயல்படுத்துவதற்குமான குழுவொன்று பிரேரணைக்கு விடப்பட்டபோது டாக்டர் பஞ்சாட்சரம், திருவாளர்கள் பெனடிக்ற், ஜெகதீஸ்வரன், சிறிதரன், விசுவலிங்கம் ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டு ஐவர் குழு அமைக்க பட்டது. ஐவர் குழு தீர்மானத்தை திரு அ. அமிர்தலிங்கம் பிரேரிக்க திரு. ஈழவேந்தன் அனுமதித்தார். இக்குழுவில் மேலும் ஐவர் சேர்க்கப்படவேண்டும். என்றும் கோரப்பட்டதைத் தொடர்ந்து ஐவர் குழு எண்மர் குழுவாக விஸ்தரிக்கப்பட்டது. மூன்று உறுப்பினர்களாக டாக்டர் எஸ். நவரத்தினம். திரு. கிருஷ்ண வைகுந்தவாசன், திருமதி பேரின்பநாயகம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

### அடிப்படை நோக்கம்

தனிநாடு சம்பந்தமாக சர்வதேச சமூகத்தினரிடையே பிரசாரம் செய்வது, உலக ரீதியாக தமிழர் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது, தமிழ் ஈழம் என அழைக்கப்படும் புதிய தமிழ் ராஜ்யத்தை உருவாக்கும்பணியில் தன்னை அர்ப்பணிப்பது ஆகிய மூன்றுஇலட்சியங்களுமே தமிழ் ஈழ விடுதலை மன்றத்தின் அடிப்படை நோக்கங்களாக அமையும் என்றும் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

தமிழீழத்தை அமைக்க தமிழீழவிடுதலை மன்றம் விரைவாக பரந்த அளவில் செயல்படவேண்டும் என்றும் உத்தேச தமிழ்ஈழராஜ்யத்தை அமைக்கக்கஎல்லாத் தமிழரும் இணைந்து ஒற்றுமையாக நீதி, பாதுகாப்பு, அமைதியுடன் உழைப்பது என்றும் இம் மகாநாட்டில் உறுதி எடுக்கப்பட்டுள்ளது.

மகாநாட்டின் தீர்மானம் ஐந்து பக்கங்களில் வெளியாகியுள்ளது.

### வைகுந்தவாசன் தீர்மானம்

திரு கிருஷ்ண வைகுந்தவாசன் சமர்ப்பித்த தமிழ் ஈழ இடைக்கால அரசு பிரேரணையை, மேற்படி மன்றத்திடம் சமர்ப்பிப்பது என்றும் ஒரு வருடகாலத்துக்குள் இது சம்பந்தமான நடவடிக்கையை மன்றம் மேற்கொண்டு நிறைவேற்றவேண்டும்என்றும் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது

### முழு வெற்றி

இமமகாநாடு குறித்து கருத்து வெளியிட்ட பார்வையாளாகள்; மகாநாடு முழு

[8–ம் பக்கம் பார்க்க]

## தமிழீழத்தை அமைக்க உலக ஆதரவு வேண்டும்

### நியூயோர்க் மாநாட்டில் 'அமிர்'

நியூயோர்க், ஜூலை 6

''நியூயோர்க தமிழ் ஈழமகாநாடு, பெரும்திருப்பத்தை ஏற்படுத்தி. புதிய உத்வேகத்தையும் அளித்திருக்கிறது உலகத் தமிழ் மக்களை ஒன்றிணைப்பதில் இம்மகாநாடு வெற்றி கண்டுள்ளது.'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் நியூயோர்க் மகாநாடு குறித்து பத்திரிகையாளர் மத்தியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

### மகாநாட்டில் 'அமிர்'கருத்து

நியூயோர்க் தமிழ்ஈழ மகாநாட்டில் திரு அ. அமிர்தலிங்கம் நீண்ட உரை நிகழ்த்திஞர்.

மகாநாட்டில் தமிழர் விடுதலை கூட்டணியின் போக்கு குறித்து தெரிவிக்கப்பட்ட

[8–ம் பக்கம் பார்க்க]

## சி.ஐ.டி. பொலிஸாரிடம் விசாரணை கையளிப்பு

(புலோலி)

பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நெல்லியடி துப்பாக்கிச் சூட்டு விசாரணைகளை இனி சி. ஐ. டி. பொலிஸாரே நடத்துவார்கள். பொலிஸார் தாம் நடத்தி வந்த புலன் விசாரணைகளை இவர்களிடம் இப்போது கையளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சந்தேகத்துக்கிடமான பல இளைஞர்கள் சி. ஐ. டி. யினரின் விசாரணை குட்படுத்தப்பட்டு ள் ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடியில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஜீப்பில் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த நான்கு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பான மரண விசாரணை நேற்று நடைபெறவிருந்தபோதிலும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. எஸ். மகேசன் நேற்றுக் காலமானதைத் தொடர்ந்து மரணவிசாரணை நடக்கவில்லை.

யாழ். மேலதிக நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் இம்மரணவிசாரணையை நடத்துவார்.

## பொலிஸ் - ராணுவம் ரோந்து நடவடிக்கை

### இன்று முதல் அமுல்

(யாழ்ப்பணம்)

பொலிஸ்-ராணுவம் கூட்டு ரோந்து நடவடிக்கை, மீண்டும் இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டு ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும் பின்னர் இம்முறை கைவிடப்பட்டது.

நெல்லியடிச்சந்தியில் கடந்த வாரம் நான்கு பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து புதிய கூட்டு ரோந்து நடவடுக்கை மீண்டும் அமுலுக்கு வந்துள்ளது.

அரிய சந்தர்ப்பம்
Computer Programming
பயிற்சி — மீண்டும் ஒரு புதிய வகுப்பு
ஆரம்பம்: 10 7-82
BASIC – COBOL – FORTRAN – R. P. G II
சிறந்த கம்பியூட்டர் செய்முறைப் பயிற்சிகள் ஒவ்வொரு மாணவர்கட்கும் – O/L அல்லது N. C. G. E. படித்த இருபாலரும் சேரலாம் — நேரில் வரவும்.
நாஷனல் அக்கடமி,
மொச்சாக் கட்டிடம்,
11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
3756

## எம்.ஜி.ஆர். கொலைமுயற்சி: ஐந்து வருடக் கடூழியம்!

சென்னை, ஜூலை. 5

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு ஐந்து வருடக்கடூழியச் சிறை தண்டனை விதித்துத்தீர்ப்பளிக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டு, மணியாட்சி ரயில்நிலையத்தில், விரபராக்கிரமபாண்டியன் என்பவர், முதல்வரைக் கொலை செய்யமுயன்றதாக இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கை விசாரித்த திருநெல்வேலி நீதிமன்ற நீதவான் எதிரிக்கு ஐந்துவருட கடூழியச் சிறைத்தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்தார்.

# வரி விளம்பரம்

### சேவை

'சுதர்சன் என்ரபிறைஸ்' நாங்கள் தலைசிறந்த கட்டட வேலை, மரவேலைத்தொழிலாளரைக் கொண்டு மிகச்சிறந்த முறையில் வீடு கட்டிக்கொடுப்போம். நீங்கள் வீடுகட்ட செலவு செய்யும் பணம் சரியான முறையில் முதலீடு செய்யப்படுகின்றதென்பதற்கு நாங்கள் உத்தரவாதமளிக்கின்றோம். இல. 9, 2ஆம் ஒழுங்கை, பலாலி றோட், யாழ்ப்பாணம். 3747

### தேவை

ஐந்து வருடங்கட்குக் குறையாத பிடவை வியாபார அனுபவமுடைய ஆண் விற்பனையாளர்கள் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். க. நாகமுத்து அன்சன், 48, 50 பெரியகடை, யாழ்ப்பாணம். 3742

தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் வரவும். ''ஷம்ரு காமன்ஸ்'', 39/7, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 3743

### பயிற்சி

ஒருமாத எலக்றிக்கல் வயரிங்-வெல்டிங் 3 மாத மோட்டார் மெக்கானிக் பயிற்சிகள் 06-07-82 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னெலொஜி, 9/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3739

### பயிற்சி

றேடியோ - டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் Hotel Management, French மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் சிறந்த ஆய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம்: 9-6-82. அனைவரும் சேரலாம். நேரில் வரவும். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3755)

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம்- கல்வியங்காட்டில் ஆறுபரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. இரண்டு, மூன்று பரப்புகளாகவும் விற்கப்படும். விபரங்களுக்கு, 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 3736

கந்தவுடையார் ஒழுங்கையில் வீடு கட்டக்கூடிய நல்ல நிலையில் உள்ள காணி 1½ப் பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. இராசம்மா, கந்தவுடையார் ஒழுங்கை, புலோலி மேற்கு, பருத்தித்துறை. (3762)

யாழ். 24-ம் இலக்க மத்தியூஸ் வீதியிலுள்ள 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. அங்கே தொடர்பு கொள்ளலாம். (3759)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் நல்லூர் திருவிழா 1982 தற்காலிக கடைகளுக்கான கொட்டில்கள் அமைத்தல்

மேற்படி திருவிழாவின் போது வியாபாரம் செய்பவர்களுக்கு 25 தற்காலிக கொட்டில் கடைகள் கட்டித்தருவதற்கான கூறுவிலைகள் 15-7-82-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொட்டில்கள் அமைப்பதற்குரிய மரங்கள், கிடுகுகள் முதலியன கேள்விக்காரரே கொண்டுவந்து கொட்டில்களை அமைத்து பாவனையின் பின்னர் பொருட்களை எடுத்துச்செல்லவேண்டும்.

கூறுவிலைகள் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''நல்லூர் திருவிழா 1982 தற்காலிக கொட்டில்கள் அமைத்தல்'' என எழுதப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

மேலதிக விபரங்கள் அலுவலக நேரத்தில் மராமத்து பொறியியலாளரிடம் அறிந்து கொள்ளலாம்.

சி. வி. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.
மாநாகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
03-07-1982. [3757]

## குருபூர்ணிமா தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய, பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின்ஆதரவில் குரு பூர்மணிமா தினம் இன்று கொண்டாடப்படும்.

யாழ். ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் இன்று பிற்பகல் ஐந்து மணியளவில் குருபூர்ணிமாதினம் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மங்கள வாத்திய இசையுடன் ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளில் பூஜா நடனம், சிறப்புரைகள், பஜனை ஆகியன நடைபெறும்.

## நாவாந்துறை றே. க. குழு வெற்றி

[யாழ்ப்பாணம்]

கல்வித் திணைக்களத்தின் ஆதரவில் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட 13 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய குழு சம்பியனானது.

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயக் குழுவிற்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக் குழுவுக்கும் இடையிலான இச்சம்பியன்போட்டி யாழ். ஸ்ரேடியத்தில் நடைபெற்றபோது நாவாந்துறை றோமஸ்கத்தோலிக்க வித்தியாலயக்குழு 5-0 கோல்களைப் பெற்று சம்பியனாகியது. முன்னர் பருதிதித்துறை ஹாட்லிக் கல்லூரியுடன் மோதிய நாவந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயக் குழு 2-1 கோல்களைப் பெற்று வெற்றியீட்டியிருந்தது.

## உடுப்பிட்டி கல்வி வட்டாரம்

## சங்கீத-நடன--நாடக போட்டி முடிவுகள்

[கரவெட்டி]

உடுப்பிட்டி கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்த சங்கீத, நடன, நாடகப்போட்டி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு வ. க. ஈசுரபாதம் தலைமையில் நடைபெற்ற இப் போட்டியில் முதல் இடங்களைப் பெற்று யாழ். மாவட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விபரம் வருமாறு:

ஆரம்ப பிரிவு - தனி இசை (கர்நாடகம்) - கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி (கிராமியம்) - கரவெட்டி திரு இருதயக்கல்லூரி (புதிய ஆக்கம்) - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

குழு இசை - (கர்நாடகம்) நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை. (கிராமியம்) - கம்பர்மலை அ. த. க. பாடசாலை. (புதிய ஆக்கம்) - கட்டைவேலி ஞானசாரியர் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி.

தனிநடனம் (பரதம்) - கரணவாய் மகாவித்தியாலயம். குழுநடனம் (கிராமியம்) - நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை. (புதிய ஆக்கம்)- கரணவாய் வேதாரணியேஸ்வரர் வித்தியாலயம்.

மத்திய பிரிவு: தனி இசை [கர்நாடகம்] உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை [கிராமியம்] - கட்டைவேலி ஞானசாரியர் கல்லூரி.

குழு இசை [கர்நாடகம்] - கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி [கிராமியம்) - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி [புதிய ஆக்கம்] - கரவெட்டி திரு இருதயக்கல்லூரி

தனிநடனம் (பரதம்) - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் [கிராமியம்] வல்வை மகளிர் வித்தியாலயம்.

குழுநடனம் [கிராமியம்] நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

சமூக நாடகம் - கரணவாய் மகாவித்தியாலயம். தனி வாத்தியம் - உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி.

மேற்பிரிவு: தனி இசை [கர்நாடகம்] உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி [கிராமியம்] - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி [புதிய ஆக்கம்] கரவெட்டி திரு இருதயக்கல்லூரி.

குழு இசை [கர்நாடகம்] உடுப்பிட்டி மகளிர் கல்லூரி [கிராமியம்] கட்டைவேலி ஞானசாரியர் கல்லூரி [புதிய ஆக்கம்] -கம்பர்மலை அ. த. க. பாடசாலை.

தனிநடனம் [பரதம்] வல்வை மகளிர் வித்தியாலயம்

வரலாற்று நாடகம் - கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி நாட்டுக்கூத்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.


## காணி விற்பனைக்கு

மருதனுமடச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உடுவில் றோட்டில், வீடு கட்டக்கூடிய ஐந்து (5) பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

பெ. வெ. செல்லத்துரை,
இளைப்பாறிய கிராமத்தலைமைக்காரன்,
பண்டத்தரிப்பு.

3754


## திருடனை மடக்கிப்பிடித்த தீரப் பெண்!

(மாவிட்டபுரம்)

கொள்ளையிடும் எண்ணத்துடன், வீடொன்றினுள் புகுந்து வீட்டுக்காரப் பெண்ணின் கழுத்தில் கைலவைத்த நபர் ஒருவரை அப்பெண் துணிச்சலுடன் மடக்கிப் பிடித்த சம்பவம் வீமன்காமத்தில் நிகழ்ந்துள்ளது.

வீமன் காமத்தைச் சேர்ந்த திருமதி தம்பாப்பிள்ளை என்பவரது வீட்டினுள் இரவு 9-30 மணியளவில் புகுந்த நபர் ஒருவர் அப்பெண்ணின் கழுத்தில் கைவைத்து நகைகள் கொள்ளையிட முயன்றாராம். இந் நபரை பிடித்துக்கொண்ட இப்பெண் கூக்குரலிடவே அயலவர்களும் வந்து இவரைப் பிடித்துக்கொண்டனர். பின்னர் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் இவர் ஒப்படைக்கப்பட்டார்.

வீமன்காமத்தைச் சேர்ந்த இந்த நபர் பலகுற்றச் செயல்களில் ஈடுபட்டவர் என்றும், கடந்த ஒருவாரத்திற்கு முன்னர் சிறையிலிருந்து வெளியேறியவர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந் நபர் குறித்து காங்கேசன் துறைப் பொலிசார் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர்,

## இன்றைய பலன்

ஆனி மாதம் 22-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(6—7—82)

மேடம்; வாழ்க்கையில் புதிய பாதையை உருவாக்குவீர்கள். உங்கள் அறிவுரைகளைக்கேட்பதற்கு மற்றவர்கள் தயாராக விருப்பார்கள். அரசினர் ஆதரவு கிடைக்கலாம்.

இடபம்: நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றும் இடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத்தவிர்த்துக்கொள்ளவும். பொறுமை நன்று.

மிதுனம்: குடும்ப வழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. நல்ல தினம்.

கடகம்: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும் அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். கடற்தொழிலாளர்கள் கவனம் செலுத்தவும். அவதானம் நன்று.

சிங்கம்: வாழ்க்கையின்று மல்லிகைத் தோட்டம் போல் மணம் பரப்பிக் கொண்டிருக்கும். காதல் சிட்டுகளுக்கு இன்று கவர்ச்சிகரமான தினம். பெரியோர் ஆதரவும் உண்டு.

கன்னி: வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள் தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் செல்வாக்கை வளர்க்கும்.

துலாம்: புதிய வழிகள்மூலம் பொருள் வரவுக்குஇடமுண்டு. சிலருக்குப் பதவி உயர்வும் கிடைக்கலாம். குடும்பத்தில் இனிமை தவழும். பொன்னான தினம்.

விருச்சிகம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கு இடமுண்டு. புதிய முதலீட்டைத் இன்று தவிர்த்துக் கொள்ளவும். துக்க தினம்.

தனு: அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும். புதிய கோணத்தில் இருந்து தாக்குதல் உருவாகும் உடமிடம் உதவி பெற்றவர்களே இன்று கையை விரிப்பார்கள்.

மகரம்: முன்னாள் ஆசிரியர் ஒருவர் உமது முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவார். அடக்கமான நடவடிக்கைகளின்மூலம் மற்றவர்களின் மனதை கவருவீர்கள்.

கும்பம்: எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு விஷமிகளின் புனைந்துரை உங்களுக்கு வேதனையைத் தரும்.

மீனம்: நீண்ட பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். தாய்வழிமூலம்பொருள் வரவுக்கு இடமுண்டு. விவசாயிகளுக்கு வெற்றியும் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## மூன்றுபிரிவுகளில் வெற்றி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டார சங்கீத, நடன நாட்டியப் போட்டிகள் கனிஷ்ட மகாவித்தியாலய கலையரங்கில் நடைபெற்றபோது கிளிநொச்சி சென். திரேசா மகளிர்கல்லூரி மூன்று பிரிவுகளில் முதலாவதாக வெற்றிபெற்றுள்ளது.

## யாழ். இந்து ஆரம்ப பாடசாலை விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று நடைபெறுகின்றன.

யாழ். இந்துக் கல்லூரிமைதானத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் விளையாட்டுப்போட்டிகளுக்கு யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உப தலைவர்திரு. சி. நாகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி இ நாகராசா பரிசில் வழங்குவார்,

## நிர்வாகிகள்

(புலோலி)

ஆவரங்கால் இந்து இளைஞர் மன்ற யாழ்டன் விளையாட்டுக் கழகத்தின் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:- சி. யோகநாதன், உபதலைவர்:- நா. பிரேமதாசா, செயலாளர்:- எஸ். தங்கராசா, உபசெயலாளர்:- இ. அருட்செல்வம், பொருளாளர் சி. அன்பழகன் அறுவர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் அதிபர் திரு. செ.தேவதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரி.கே. என். திலகன் கலந்து கொள்வார். திருமதி. வி.திலகன் பரிசில் வழங்குவார். (வெ)

## இயற்பகையார் வரலாறு

[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் அகில இலங்கை சைவமகாசபை நடத்தும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவில் இன்று இயற்பகை நாயனார் வரலாறு இடம்பெறவுள்ளது.

# இஸ்ரேலிய படைகளை வெளியேற்ற லெபனான், சிரியா முஸ்தீபு!

## பாலஸ்தீனியர் நடமாட்டம் பெயரளவிலும் கூடாதாம்

பெய்ரூட் ஜூலை 5 தென்லெபனானில் போரிட்டு வரும் இஸ்ரேலியப் படைகளை அவை ஆக்கிரமித்துள்ள பகுதிகளிலிருந்தும் வெளியேற்றுவதற்கான தீவிர ராஜதந்திர முயற்சிகளில் லெபனான் சிரியா ஆகியன ஈடுபட்டுவருகின்றன.

சிரியா ஜனாதிபதி திடீர் விஜயமொன்றை நேற்றுமேற்கொண்டு ''சவுதி அரேபியா சென்றிருந்தார். அவரை பதிய மன்னர் பஹ்த் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார். சுமார் ஒன்றரை மணித்தியாலயங்கள் இஸ்ரேலிய ஊடுருவல் குறித்து மன்னர் பஹ்த்துடன் சிரியா ஜனாதிபதி உரையாற்றினர்.

அரபு நாடுகள் இஸ்ரேலிய இராணுவத்தை பெய்ரூட்டிலிருந்தும் வெளியேற்றச் செய்வசில் தீவிரநடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அதே சமயம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பந்தோபஸ்துசபையினையும் இஸ்ரேலியரது ஆக்கிரமிப்புக் கெதிராக உரியநட நடவடிக்கை ளை எடுக்கும்படி அவை கோரியுள்ளன. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பந்தோபஸ்து சபையில் ஐந்து வல்லரசுநாடுகள் அங்கம் வகிக்கின்றன.

ஜோர்தான் அரசும் இஸ்ரேலிய ஊடுருவலைத் தடுக்கும் விதத்தில் அரபுநாடுகளுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றது. ஜோர்தானிய பிரதிநிதி யெருவர் மன்னர் ஹுசைனின்செய்தியொன்றை சவுதி மன்னர் பஹ்த்திடம் நேற்றுக் கையளித்தார்.

தன்ஸானிய அதிபர் திரு. ஜூலியஸ் நியரேரே இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குத் தமது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார். அத்துடன் அவர் இஸ்ரேல் மீது உரிய நடவடிக்கைகளை ஐ நா. பந்தோபஸ்துசபை மேற்கொள்ளவேண்டு மென்றும் கோரியுள்ளார்.

கூட்டுச்சேரா நாடுகளின் தலைவரான கியூபா ஜனாதிபதி திரு. பிடல் காஸ்ட்ரோ, கூட்டுச்சேரா நாடுகள் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கெதிராக ஒன்று சேரவேண்டுமெனக் கேட்டிருப்பதுடன் பாலஸ்தீன இயக்கத்துக்கு தமது ஆதரவை மீண்டும் தெரிவித்துள்ளார்

இஸ்ரேலிய இராணுவத்தை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வரும் அதேவேளை பெய்ரூட்டின் மேற்கு க்குப் பாதைகளை இஸ்ரேலியப் படைகள் தடைசெய்துள்ளன வென்றும் இதனால் அப்பகுதிகளுக்கான தண்ணீர் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டிருக்கின்றதெனவும் அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய அமைச்சரவை நேற்றுக்கூடி அவசரமாநாடொன்றை நடத்திய பின்னர் அமைச்சரவை பேச்சாளர் வெளியிட்ட கருத்தில் தென் லெபனானில் பாலஸ்தீனர்களது நடமாட்டம் பெயரளவுக்குத் தானும் இருக்கக்கூடாதெனத் தெரிவித்துள்ளார். (கி)

## மருந்துஇல்லை

சரவணை

புங்குடுதீவு — கிராமோதய இலவச ஆயுர்வேத வைத்திய சாலையில் பலமாதங்களாக மருந்து இல்லாமையால் நோயாளர்கள் கஷ்டமடைகின்றனர். மேலிடத்திற்கு இதுபற்றி அறிவித்தும் பயன் எதுவும் ஏபடவில்லையாம். (அ[

## "காந்தீயக் கொள்கை: உலக நாடுகள் பாராட்டு"

### பிரதமர் இந்திரா கருத்து

புதுடில்லி. ஜூலை 5 உலகில் ஆயுதக்குறைப்பினையும் அணுஆயுதப் போரினையும் தவிர்க்க வலுவான பொதுக்கருத்து தேவைப்படுகிறது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேசத்தில் இரு நாட்கள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட திருமதி காந்தி அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் காந்தி மேலும் தனது உரையில் 'காந்தீயக் கொள்கையின் அடிப்படையில் செல்லும் இந்தியாவின் போக்கினை உலக நாடுகள் பல இன்று பாராட்டுகின்றன வென்று தெரிவித்ததுடன், உலகநாடுகளில் நடைபெற்று வரும் பயங்கரவாத நடவடிக்கைகளையும் காரசாரமாகக் கண்டித்தார். (கி)

### ரயில் நிலையங்களில்

## அடையாள அட்டைகளின்றி பார்சல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

அடையாள அட்டை கொண்டு செல்லாதவர்களின் பார்சல்கள் புகையிரத நிலையங்களில் இனிமேல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இது சம்பந்தமான சுற்று நிருபம் புகையிரதநிலைய அதிபர்களுக்கு பேலிடத்திலிருந்து நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக யாழ். புகையிரத நிலையப் பிரதம அதிபர் திரு. ஜோன் தம்பிராசா தெரிவிக்கையில் ''பார்சல்கள் அனுப்ப வருபவர்கள் தங்களின் அடையாள அட்டைகளையும் கொண்டுவருதல் வேண்டும். அடையாள அட்டை கொண்டு வராதவர்களின் பார்சல்கள் ஏற்றுக் கொள்ளமுடியாது'' என்றார்.

அடையாள அட்டையுடன் கொண்டு வருபவர்களின் பார்சல்கள் மீது சந்தேகம் ஏற்பட்டால் திறந்து பார்க்கவும் பார்சல்களைத் திருப்பிவிடவும்முடியும் என்றும் அவர் தெரிவித்தார். [மா —அ]

## பிரிட்டன் மீண்டும் நகர மறுக்கிறது!

லண்டன், ஜூலை 5 பிரிட்டனில் ரயில்சேவையைச் சேர்ந்த இருபத்தையாயிரம் என்ஜின் சாரதிகள் நேற்று முன்தினம் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

இவ்வேலைநிறுத்தம் இவ்வாரத்தில் இரண்டாவது தடவையாகவும், இவ்வாண்டில் மூன்றாவது தடவையாகவும் நடைபெறுகிறது.

கடந்த வாரம் பிரிட்டனின் போக்குவரத்துப் பகுதியினர் கூட்டாக நடத்திய வேலைநிறுத்தத்தில், மக்கள் பலத்த சிரமத்துக்குள்ளானதும் போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பிதமடைந்திருந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

ரயில்என்ஜின் சாரதிகளிடம் வேலைநிறுத்தத்தைக் கைவிடுமாறு பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெ தட்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். [கி]

## உலக டெனிஸ் சாம்பியன் தோல்வி

லண்டன் ஜூலை 5 உலக டெனி சாம்பியனை ஜோன்மக் என்ரோவை, ஜிம்ம கோனர் என்றவீரர் நேற்று முன்தினம் தோல்வியடையச் செய்தார்

விம்பிள்டனில் நடைபெற்று வரும் டென்னிஸ் பந்தயங்களன் போதே அமெரிக்கரான 22 வயதுடைய மக்என்ரோவை அதே நாட்டைச் சேர்ந்த 29 வயதுடைய ஜிம்மி கோனர் தோற்கடித்தார். வீரர் ஜிம்மி 1674 ஆண்டிலும் விம்ள்டன் சாம்பியனானவரென்பது குறிப்பிடத்தக்கது.

வீரர் மக்என்ரோ பலதடவைகள் தொடர்ச்சியாக உலக டென்னிஸ் சாம்பியன் பட்டத்தைப்பெற்று வந்த சுவீடன் நாட்டு வீரரான ஜோன் போக்கைத் தோல்வியடையச் செய்ததன் மூலமே உலகச் சாம்பினாக விளங்கி த்தார்.

விம்பிள்டனில் டென்னிஸ் பந்தயங்கள் நடைபெற்று வரும் அதேவேளை ஸ்பெயினில் மட்றிட்டில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகளின் அரை இறுதியாட்டத்துக்கு பிரான்ஸ் வட அயர்லாந்தை 4–1 என்ற ரீதியில் வெற்றி பெற்றும் போலந்து சோவியத் யூனியனை சரிசமனாக்கியும் தெரிவாகியுள்ளன. (கி)

## புதிய பொறுப்பதிகாரி நியமனம்

(புலோலி]

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியாக யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொறுப்பு அதிகாரி திரு எஸ் ஸ்ரீதரன் நியமிக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. திருச்சிற்றம்பலம்துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## "வீடு கொளுத்தப்பட்டதை நான் பார்க்கவில்லை"

(மாவிட்டபுரம்)

''சம்பவம் நடந்த அன்று இரு எதிரிகளும் ஓடியபோது நான் அவர்களைக்கண்ட இடத்தில் எதுவித பாதையுமில்லை. மறுநாட்காலை பார்க்கும் போது வேறு இடத்தில் வேலி பிரிக்கப்பட்டு இருந்தது. இவர்கள் வீட்டைக்கொளுத்தியதை நான் காணவில்லை. நான் இவர்களை இருபதுயார் தூரத்திற்கப்பால் ஓடும்போது கண்டு, வீட்டிற்குத் திரும்பும் போது வீடு எரிந்து கொண்டு இருந்தது. நானும் எனது பேரனும், நின்ற இடத்துக்கும் வீட்டிற்கும் இடையில் ஐந்துயார் தூரமிருக்கும். எதிரிகள் ஓடியதை பின்புறமாகவே நான் கண்டேன் எதிரிகளைப் போன்ற தோற்றமுடைய வேறு பெண்களும் எனது கிராமத்தில் உண்டு''

புங்குடுதீவு வீடு எரிப்பு வழக்கு விசாரணையின்போது முறைப்பாட்டுக்காரர் சார்பில் சாட்சியமளித்த பாலசிங்கம் கருணாகரன் என்ற மாணவன் இரண்டாம் எதிரியின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி திரு. எஸ்.கே. மகேந்திரனால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது மேற்கண்டவாறு கூறினார்

இவ்வழக்கில் புங்குடுதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னையா என்பவருக்குச் சொந்தமான வீட்டைக் கொளுத்தியதாகவும், ரூபா பத்தாயிரம் நஷ்டம் ஏற்படுத்தியதாகவும், அதே ஊரைச் சேர்ந்த தங்கத்துரை பெண் நவமணி, ஆனந்தன்பெண் தங்கம்மா ஆகியோருக் கெதிராக ஊர்காவற்துறைப் பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு ரி.கே.என். திலகன் முன்னிலையில் புங்குடுதீவு சுற்றுநீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது முதலாம் எதிரியின் சார்பில்சட்டத்தரணி ப. கதிரவேலுவும், 2ம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரனும் ஆஜராகி முறைப்பாட்டுக்காரனின் சார்பில் ஊர்காவற்றுறை பொலிசாரின் உதவியுடனும் சட்டத்தரணி சி. ரி. லிங்கராசாவின் அநுசரணையுடனும், சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜராகினார்.

சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரனின் குறுக்கு விசாரணையை அடுத்து எதிரிகள் இருவரையும் விடுதலை செய்து நீதிபதி தீர்ப்பளித்தார். விசாரணையைப் பார்க்க ஏராளமானோர் நீதிமன்றத்தில் திரண்டிருந்தனர்.

## கொலம்பியா பத்திரமாக தரை இறங்கியது!

## 1988-ல் மாதத்தில் இரு பயணங்கள்!

கலிபோர்ணியா, ஜூலை 5 கடந்த ஒருவாரகாலமாக விண்வெளியில் சஞ்சரித்த 'கொலம்பியா' நேற்று எதிர்பார்த்தபடி தரையிறங்கியது.

அமெரிக்காவின் 206வது சுதந்திரதினமான நேற்றைய தினம் வெற்றிகரமாகத் தனது பயணத்தை நிறைவேற்றிய 'கொலம்பியா'வின் தரையிறங்கலைப் 'பார்வையிட 5 லட்சத்துக்குமதிகமானவர்கள் கூடியிருந்தனர்; இவர்களுடன் ஜனாதிபதி திரு. ரொனல்ட் ரீகனும் கலந்து கொண்டார்.

கலிபோர்ணியாவின் எட்வேட் விமான நிலையத்தில் நேற்றிரவு ஒன்பது மணிக்குப் பின்னர் 'கொலம்பியா' மிகவும் பாத்திரமாகத் தரை தட்டியது. 'கொலம்பியா' வீரர்களை ஜனாதிபதி ரீகன் வரவேற்றார்.

நான்காவது தடவையாகவும் இறுதியாகவும் மேற்கொள்ளப்பட்ட 'கொலம்பியா'வின் இப் பயணத்தின் போது இராணுவத்துறை சார்ந்த நடவடிக்கைள் பரிசீலிக்கப்பட்டன.

எதிர்வரும் நவம்பரில் செய்மதிகளை விண்வெளியில் 'கொலம்பியா' ஊடாகச் செலுத்துவது பற்றிய ஆராய்ச்சி நடத்தப்படவிருக்கின்றது; அத்துடன் 1988ம் ஆண்டளவில் ஒரு மாதத்துக்கு இரு தடவைகள் கொலம்பியா தனது விண்வெளிப் போக்குவரத்தை மேற்கொள்ளுமெனத் தெரிவிக்கப்பட்டது. [கி]

மணிவாக்கு

படிக்க முடியாதவர் பலர் படிப்பிக்கத் தொடங்கி விடுகின்றனர். — ஒஸ்கார்வைல்ட்

# நமது நோக்கு

## நெல்லியடி தொடக்கம் நியூயோர்க் வரைக்கும்

"எழுநூறுலட்சம் தமிழ் மக்கள் வாழும் உலகில் அவர்களுக்கென ஒருநாடு அவசிய தேவை.

தமிழ்த் தேசியம் அண்மைக் காலத்தில் உலகளவில் அதிக முன்னேற்றம் கண்டிருக்கிறது

இலங்கையின் இன்றைய அரசியல் நிலையில் தமிழ் மக்கள் தமக்கென ஒரு ஆட்சி அமைக்க தக்க நடவடிக்கைகள் எடுப்பதில் முன்னிற்கவேண்டும்.

தமிழ் மக்களின் விடுதலைச் சழைக்க இலங்கையில் வாழும் ஒவ்வொரு தமிழனுக்கும் தக்க உரிமை உண்டு".

மேற்கூறிய நான்கு முக்கிய கருத்துக்கள் சென்ற வார இறுதியில் நியூயோர்க்கில்கூடிய முதலாவது உலக ஈழமகாநாட்டில் வலியுறுத்தப்பட்டன.

இருபத்திரண்டு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மாநாடு அமெரிக்க சுதந்திர தினத்தையண்டி நடைபெற்றது எமது கவனத்துக்குரியது. நெல்லியடி நீண்ட தூரம்; அதுதொடர்பற்றநிகழ்ச்சி.

வேற்று நாட்டு மக்களின் அரசியல் வாதங்கள் சர்ச்சையைக் கிளப்ப முடியுமென்றாலும் அமெரிக்க சுதந்திரப் பிரகடனம், தங்கள் நாட்டில் வாழும் எந்த மனிதனுக்கும் பேச்சுச்சுதந்திரம் அளித்திருக்கிறது; அதனை ஒருபோதும் பறிக்க மாட்டாது

இலங்கையில் இலங்கை மக்கள் தங்கள் அரசியல்கருத்துக்களை வெளியிடபூரண வாய்ப்பில்லாதநிலை காலத்துக்குக்காலம் ஏற்படலாம். அந்த அபாயநிலை அமெரிக்காவில் என்றும் இல்லை என்பதே இந்த நியூயோர்க் மாநாட்டின் விசேடசிறப்பு.

இந்த அரசியல் மாநாட்டின் தீர்மானங்கள் இந்த நாட்டையோ அல்லதுஇங்கு வாழும் தமிழ் மக்களையோ எவ்வகையிலும் கட்டுப்படுத்தும் அதிகாரம் அற்றது.

இதனை அங்கு தெளிவாக உரைத்த தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகள், இந்த மகாநாட்டின் மகத்துவத்தை உணரார்தவர்கள் அல்லர்.

தமிழ் மக்களின் விடுதலை அவர்கள் கையிலேயே என்றால் இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலை இந்தநாட்டில் வாழும் மக்களையே சாரும். வேற்று நாட்டுச் சக்திகள் இதற்கு முடிவு காண முடியாததென்பதும் அங்கு தெளிவுற விளக்கப்பட்டிருக்கிறது.

தங்கள் தங்கள் நாட்டில் சிறுபான்மையராக, பலவீனப்பட்டு, உரிமைகள் இழந்துவாழும் தமிழ்இனம் தன் முழு வளர்ச்சிக்கு தடையாகவிருக்கும் அரசுகளைஎவ்வாறு அணுகலாம்; தங்கள் பொருளாதார சமுதாய நிலையை எவ்வாறு சீர்படுத்தலாமென்ற விடயங்களில் உலகத் தமிழ் மன்றம் தீவிர உதவி புரியலாம்.

இவ்வித உதவியை இலங்கைத் தமிழ் மக்கள் நாடுவது நன்று; அரசியல் முடிவுகளையோ தலையீட்டையோ அன்று.

அரசியல் ஆலோசனைகள் வேற்று நாடுகளை இவற்றில் கலப்பதானால் அது அபாயமான முயற்சியாகலாமென்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

பல்லாயிரம் மைலுக்கப்பால் நடைபெற்ற இந்த வைபவத்தையிட்டு இலங்கை அரசு ஆழமாக ஆராய்கின்றது; இங்கு வெளியாகும் ஆங்கில தினசரிகள் அதற்கு மேலாக நியூயோர்க்கை நெல்லியடிக்கு இழுக்கும் முயற்சியில் வெற்றியும் கண்டிருக்கின்றன. அர்த்தமற்ற வெற்றி; அமைதிக்குதவாத வெற்றி!

எம்மைப் பொறுத்தளவில்நெல்லியடி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒருசிற்றூர்; நியூயோர்க் உலகின் மிகப் பலம் வாய்ந்த நாட்டின் முன்னைநாள் தலைநகரம்; இரண்டின் பெயர்கள் ஒரே இன எழுத்தில் தொடங்குவதன்றி வேறெந்தத் தொடர்பும் நாம் காண முடியவில்லை. ஆங்கிலத்தில் சேர்க்குக்கும் சீசுக்கும்உள்ள தொடர்பு என்று சொல்வார்கள்.

வடபகுதி வன் செயல் ஒரு இடங்கண்ட விடயம்; யார் எத்தனை பேர், எங்கு, எவ்விதத்தில் கொலை செய்யப்பட்டாலும் அது வடபகுதியில் என்றால் அது வடபகுதி (தமிழ்ஈழ) பயங்கரவாதம் என்ற குறிசுடப் பட்டுவிடும்; அது அப்படியென்றும், தமிழ் ஈழம் பேசப்படும் இடமெல்லாம் பயங்கரவாதத்துடன் தொடர்புடையதென்றும், ஆதாரமற்ற அவசர முடிவு சில காலமாக இந்நாட்டில் நாம் காணும் நிகழ்ச்சி,

இவ்வித ஆதாரமற்ற ஆவேச முடிவுகள் உண்மைப் புலனாய்வுக்குத் தடையாகின்றன,

நெல்லியடிச் சம்பவம் மிகக்கோரமான கொலை—பொலிசார் தொடர்ந்து கொலை செய்யப்படும் கொடுமை இருப்பினும் காரணம் அரசியல்தானா? அல்லது பழிவாங்கும் பயங்கரவாதமா? அல்லது பொலிஸ் தனிப்பட்ட கோஷ்டியின் மோதலா?

யந்திர துப்பாக்கி மிக இலகுவாகத் தொழிற்படும் சம்பவங்களைக்கண்ட பொலிஸார் சாதாரண பாதுகாப்புடன் இவ்வித இடங்களில் ஞேந்து புரிய முற்பட்டது விவேகமாகுமா?

வடபகுதி மக்கள், அரசியல் பயங்கரவாதமென்ற பெயரில் பல கொலைகள், கொள்ளைகள், இனக்கலவரங்களுக்குப் பலியாகி வருகின்றனர். அமைதி காணாத வாழ்வே அவர்களின் அண்மைக்காலவாழ்வு.

பொலிஸாரின் பாதுகாப்பை என்றுமே நாடும் பொது மக்கள் இவ்வித பயங்கர சம்பவங்களின் இரகசியத்தைக் கண்டுபிடிக்க உதவ வேண்டும்; உதவுவார்கள். அதற்கு அரசாங்கமும்தென் பகுதி மக்களும் தகுந்த முறையில் வழிப்படுத்த வேண்டும்.

## பண்டாரவன்னியன் சிலை அமைப்பு: கட்சிரீதியில் செயற்படக்கூடாது!

### ஐ. தே. க. உறுப்பினர்கள் கருதம்

(வவனியா)

"பண்டாரவன்னியனின் சிலை நிறுவும் தீர்மானத்தை மகிழ்ச்சியுடன் ஏகமனதாக வரவேற்கிறோம். ஆனால்செயற்குழுக் கூட்டங்களுக்கு இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பல பிரமுகர்களையும் அழைத்து ஆலோசிக்காது தாங்கள் ஒரு சில கட்சி பிரமுகர்களுடன் செயற்படுவது கவலைக்குரிய விடயம்"

வவனியா மாவட்ட அபிவிருத்திசபை ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் திருவாளர்கள் டாக்டர் சி.வ.பரராஜசிங்கம், ரி. பரமநாதன் இருவரும் கூட்டாக வவனியா மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு எம். சிற்றம்பலத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: "பண்டாரவன்னியன் ஆலோசனைக் குழுவில் எமது பெயர்கள் கூட இடம் பெறுததையிட்டு மிகக் கவலைப்படுகிறோம்.

"இது இன மதபேதமின்றி இந்நாட்டு பல்வேறு இனத்தவர்களுடனும் தோளோடு தோள் கொடுத்து அன்னியரை இந் நாட்டிலிருந்து விரட்ட முயன்ற தேசிய வீரன் பண்டாரவன்னியனின் புகழுக்கே மாசுபடுத்துவதாகும்"

எனவே இன்னும் காலதாமதமின்றி கட்சி பேதமின்றி, "வன்னி" மாவட்டப் பிரமுகர்களையும் அழைத்து ஆலோசித்துச் செயற்படும்படியும், மாவீரனின் சிலை நாட்டு விழாவைக் கட்சி பேதமின்றிநடத்தும்படியும் கேட்டுள்ளனர்.

இக்கடிதத்தின் பிரதி வவனியா மாவட்ட அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க)

# மக்கள் கருத்து

## புராண படனம்

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் புராணபடனம் பரவலாகவும் பிரபலியமாகவும் இருந்துவந்தது. இப்பொழுது இது அருகிவருகிறது சிற்சில இடங்களில் புராணங்கள் படிக்கப்பட்டாலும், அங்கு வாசிப்போரையும், பயன் சொல்லுபவரையும்தான் பெரும்பாலும் காணலாம். கேட்போரைக் காண்பது அரிதாகும். இந்நிலையில் சேர். பொன் அருணசலம் கொழும்பில் நடாத்திய புராணபடனத்தைப் பற்றிக் கூறுவது பொருத்தமாகவிருக்கும். பின்வருமாறு கொழும்பு ஸ்ரீ பொ. அருணசலமவர்களும் மனைவியாரும் தங்கள் வீட்டில் ஸ்ரீ ம. திருஞானசம்பந்தபிள்ளை உபாத்தியாயரவர்களைக் கொண்டு கந்தபுராணம் படிப்பிக்கத் தொடங்கி, ஜூலை மாதம் கசஉ யாகிய திங்கட்கிழமையிலன்று வள்ளியம்மை திருக்கல்யாணப்படலம் பொருள் சொல்லுவித்துக் கேட்டு மகிழ்ந்து படிப்பை முற்றுவித்தார்கள். அன்று பிராமணர் சைவர்கட்கு அன்மதானமும் மற்றைச் சனங்கட்கு அன்னதானமுஞ் செய்தார்கள். திருக்கல்யாண மண்டபம், மகரதோரணங்களாலும் பூர்ண கும்பங்களாலும் பிறவற்றாலும் மிகச்சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அன்று ஸ்ரீ நன்னித்தம்பி முதலியாரவர்கள், சுப்பிரமணிய முதலியாரவர்கள், பிரதி அட்டோர்ணி ஜெனரல் பொ. இராமநாதரவர்கள். த சண்முகம்பிள்ளையவர்கள், த முத்துக்குமாரப்பிள்ளையவர்கள் முதலியார் தங்கடங்கள் பனைவி சமந்தராதியரோடு வந்து படிப்புக்கேட்டுச் சந்தோஷமடைந்துபோயினர். [இந்துசாதனம் 22-8-1894.)

சைவத்தையும், தமிழையும் வளர்ந்த சேர். பொன்.அருணசலம், சேர். பொன். இராமநாதன் அவர்கள் தனையனார் பொன். குமாரசுவாமி முதலியார் போன்ற தலைவர்களை நாம் இனி எப்பொழுது காண்போம்.

ச. அம்பிகைபாகன்
மல்லாகம்,

## ரமழான் சிந்தனை

'விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் றமழான் மாத நோன்பு ஸக்காத் பித்ராவைக் கொண்டேயல்லாது உயர்த்தப்படமாட்டாது,'

ஸஹர் முடிவு: 4-23.
நோன்பு திறக்கும் நேரம்: 6-29.
தொகுப்பு: சுல்பிக்கா கௌது

அராலி வடக்கு

## மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில்

"கோயிலில்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம்" என்பது எமது ஆன்றோர் வாக்கு கோயில் எம்முடைய பண்பாட்டுப் பாரம்பரிய நிறுவனமாக அமைந்துவிட்டது. பல்லவ, சோழ மன்னர்கள் தமிழகத்திலே ஆட்சி நடாத்திய காலங்களிலே கோயில் சர்வகலாசாலையாகவும் அரும் பொருளகமாகவும், நிதி நிறுவனமாகவும் வைத்தியசாலையாகவும் கலைகள் பேணப்படும் இடமாகவும் கருதப்பட்டு வந்தது இன்றும் கோயிலுடன் எம்முடைய பல்வேறு வகையான பண்பாட்டு வாழ்வு பின்னிப் பிணைந்திருப்பதை நாம் அறிவோம். இந்த வகையிலே.

ஈழத் திருநாட்டின் சிகரமாய் விளங்கும் யாழ்ப்பாணத்தில் அன்பும் பண்பும் குருலிங்க சங்கமபக்தியும்நிறைந்து சைவத்தமிழ் மணம் கமழும் அராலி வடக்கில் எம் மூதாதையரால் 1865ம் ஆண்டில் தருமசாதனம் செய்யப்பட்ட மயிலியற்புலம் என்ற பெருமைமிக்க திருவருட்பகுதியில் வானோங்கி வளர்ந்த இலுப்பைமரமும் வேப்ப மரமும் புடைசூழ திருக்கோவில்

(5-ம் பக்கம் பார்க்க)

## முட்டையுள் சித்திரம் படைக்குமோர் தமிழன்!

- சோ. பத்மநாதன் -

'கைவினை சிற்பம் ஓவியம் — இன்ன
கவின்கலை வல்லம்யாம்' என்று
பொய்பல சொல்லிப் பழமையின் நிழலில்
போயொதுங் குவர் இவர் என்று
வையகம் இகழத் தலைகுனிந் திருந்தோம்!
வந்தனை உனதுகை வண்ணம்
ஐய, சண்முகனே! கண்டதும் நிமிர்ந்தோம்!
அடட,நீ ஒருபெருந் தமிழன்

தூரிகை முட்டைத் துளையினுட் செலுத்தி,
தொடர்ந்துபல் ஆண்டுகள் முயன்று
விரநீ செய்த விந்தைகள் கண்டால்
விடுவனோ பாரதி! எழுந்து
"யாரடா, தமிழன் திறமைகள் தெரியா(து)
உளறுகின்றவன்? இங்கு வந்து
பாரடா, தம்பி சண்முகம் ஆம், என்
பாண்டியன் படைத்ததை!" என்பான்!

அம்பலக் கூத்தன் ஆடலும், புத்தன்
அமைதிசொட் டிடுமுக மலரும்,
மன்பதைக் காக சிலுவையில் யேசு
மாய்வதும், மராட்டிய நாட்டின்
சகமாம் வீர சிவாஜி வாளோடு
சிலிர்த்தெழு தோற்றமும், கோதுள்
எங்ஙனம் வைத்தாய்! எங்கிது கற்றாய்!
இணையிலோய்! நீயொரு தமிழன்!

ஒருசிறு குறளால் உலகினை அளந்தே
உயர்ந்த வள்ளுவன்உரு வத்தை
அரிசியா லாக்கி அற்புதம் புரிந்தாய்!
அனைத்துல கினிலும், உன் போலப்
புரியவல்லார்யார்? மானிட முயற்சி
போய்த்தொடும் கொடுமுடி இதுவா?
அரிதுநின் ஆற்றல்! அஞ்சலி செய்வோம்!
ஆண்டவன் நினக்கருள் புரிக!

★ ★ ★

## நித்தம் குமரி

கொங்குலா மலர்க்குழலும் பிறைநுதலும்
கயல்விழியும் குமுதவாயும்
சங்கமாமணிமிடறும் கழைப்பு மும்
மலர்க்கரமும் தரளமாலைத்
துங்கமாகிரிகுயமும் கொடியிடையும்
பதும அடித்துணையுமுள்ள
எங்கள் நாயகி எழில்மயிலைக்
கற்பகக் கொடியை இறைஞ்சி வாழ்வாம்.

- ஆனந்தசிவம் ஐயர்

# காதல் தம்பதியிடையே சீதனப்பிரச்னை தலைதூக்கியது

## தாயும் குழந்தையும் நஞ்சுக்குப் பலி!

(கரவெட்டி)

காதலித்துத் திருமணம் செய்து கொண்ட இளம் பெண் ஒருவர் தனது பத்து மாதக் குழந்தைக்கு நஞ்சு பருக்கி, தானும் நஞ்சருந்தி மரணமானார்.

வல்வெட்டித்துறை கொம்மாந்துறை என்னும் இடத்திலேயே இப் பரிதாப சம்பவம் நடந்துள்ளது.

செல்லம்மா அபிகாபதி [23 வயது] என்னும் இளம் பெண்ணே தனது பத்துமாதக் குழந்தைக்கு நஞ்சு பருக்கி தானும் நஞ்சு அருந்தி மரணமானவராவார்.

செல்லம்மாவின் மரணம் குறித்து வடமராட்சிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. தி. வேலுப்பிள்ளையும், பத்துமாதக் குழந்தையான சுயதாஸின் மரணம் குறித்து பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். வைரமுத்துவும் விசாரணை நடத்தினர்கள். வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர்.

விசாரணையின் போது இறந்தவரின் கணவனான சி. அப்பிகாபதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இறந்தவரும் நானும் 7, 8 வருடங்களுக்கு முன்காதலித்துத் திருமணம் செய்துகொண்டோம் பத்துமாதக் குழந்தை உட்பட மூன்று பிள்ளைகள் எமக்குண்டு.

கல்யாணம் செய்தநாள் முதல் இருவருக்குமிடையே சீதனப்பிரச்னை இருந்துவந்தது. சம்பவத்திற்கு 2 3 நாட்களுக்கு முன்பு நான் மனைவியுடன் வாக்குவாதப்பட்டுவிட்டு நெடுங்கேணி கமத்துக்குச் சென்று வெங்காயத்தைவிற்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன். வீடுதிரும்பியதும் மனைவியுடன் ஒன்றும் கதைக்காது யாழ்ப்பாணம் சென்றுவிட்டேன். யாழ்ப்பாணம் போய்த் திரும்பி வரும்போது மனைவி நஞ்சுகுடித்து மரணமானதாகவும், மந்திகை ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும் அறிந்தேன். நான் அவருடன் கதைக்காததினால் விரக்தியடைந்து நஞ்சருந்தியிருப்பார் என நமபுகின்றேன்.

பத்துமாதக் குழந்தை, சுயதாஸின் மரணவிசாரணையில் குழந்தையின் தந்தையும் இறந்த பெண்ணின் கணவருமான அப்பிகாபதி சாட்சியமளிக்கையில் ''எனது மனைவி நஞ்சு குடித்த நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட போது யாரும் குழந்தையைக் கவனிக்கவில்லை. பின்னர் வீடு சென்று பார்த்தபோது குழந்தை மரணமாகி இருந்தது. குழந்தையில் நஞ்சு வாடை வீசியது'' என்றார்.

குழந்தையைப் பரிசோதனை செய்த மந்திகை அரசினர் வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் சாட்சியமளிக்கையில் குழந்தையின் வயிற்றில் நஞ்சு இருப்பதாகவும், நச்சுத்திராவகத்தினல் குழந்தை மரணமானது என்றார்.

விசாரணை முடிவில் இளம் பெண் செலலப்மாவின் மரணம் தற்கொலை என்றும் குழந்தையின் மரணம் கொலை எனவும் விசாரனை நடத்திய மரணவிசரணை அதிகாரிகள் தீர்ப்பளித்தனர். (அ)

# செவன, கம் உதாவ சீட்டிழுப்பு முடிவுகள்

[கொழும்பு]

தம்புல்லையில் இழுக்கப்பட்ட செவன லொத்த சீட்டிழுப்பில் பரிசுபெறும் டிக்கட்டுகள் வருமாறு:

**முதற் பரிசு**
**19 Q 0643**
(புல்லர்ஸ் வீதியிலுள்ள 10 லட்சம் ரூபா பெறுமதியான வீடு)

**இரண்டாம் பரிசு**
**25 U 0519**
(நுகே கொடையிலுள்ள ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான வீடு)

**மூன்றும் பரிசு**
**30 P 0565**
(ரத்தொலுவையிலுள்ள மூன்று லட்சம் ரூபா பெறுமதியான வீடு)

கம் உதாவ சீட்டிழுப்பின் பரிசு பெறும் டிக்கட்டுகள் வருமாறு:

**முதலாவது பரிசு**
**26 D0511**
[மிட்சுபிஸி லான்யர் கார்]

**இரண்டாவது பரிசு**
**94 B0751**
(IMI 542 உழவு யந்திரமும் டிரெய்லரும்)

**மூன்றுவது பரிசு**
**81 L 0996**
25 மெட்ரிக் தொன் அலாஞ சீமெந்து]

**நான்காவது பரிசு**
**13 V 0649**
[ஹொண்டா மோட்டார் சைக்கிள்]

**ஐந்தாவது பரிசு**
**48 y 0808**
(ஹிட்டாச்சி கலர் டெலிவிஷன்]

**ஆருவது பரிசு**
**79 R 0958**
[சிவில் குளிர்சாதனப்பெட்டி]

கம் உதாவ சீட்டிழுப்பில் ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகள் வருமாறு:

கறுப்பு வெள்ளை T-V

| | |
|---|---|
| 56 K 0543 | 24 A 0355 |
| 57 O 0615 | 59 W 0429 |
| 72 Q 0255 | 32 K 0800 |
| 23 S 0035 | 57 A 0481 |
| 32 R 0728 | 21·C 0421 |
| 47 V 0473 | 42 G 0509 |
| 08 J 0059 | 07 C 0511 |
| 52 I 0446 | 05 J 0437 |
| 25 G 0347 | 60 Q 0620 |
| 19 U 0671 | 5 A 0425 |
| 36 U 0293 | 59 M 0214 |
| 39 X 0134 | 40 Y 0536 |
| 65 U 0525 | 30 R 0350 |
| 51 P 0696 | 94 C 0510 |
| 49 L 0689 | 52 B 0888 |

20 பிளேயிங்பிஜன் சைக்கிள்கள்

| | |
|---|---|
| 47 V 0473 | 05 J 0437 |
| 36 C 0?93 | 30 R 03 0 |
| 42 G 0509 | 25 G 0347 |
| 59 M 0214 | 51 P 0696 |
| 08 J 0059 | 60 O 0620 |
| 39 X 0134 | 94 C 0510 |
| 70 C 0511 | 19 U 0671 |
| 44 Y 0536 | 49 L 0689 |
| 52 T 0446 | 53 A 04 5 |
| 65 U 0525 | 52 B 0883 |

48 எவறெடி டோர்ச் விளக்குகள்

| | |
|---|---|
| 28 P 0004 | 55 D 0689 |
| 40 R 0878 | 75 N 0446 |
| 97 B 0283 | ?0 K 0007 |
| 36 E 0506 | 10 A 0167 |
| 13 R 0630 | 29 G 0774 |
| 43 X 0710 | 32 C 0109 |
| 27 W 0780 | 53 N 0650 |
| 81 P 0537 | 71 C 0052 |
| 03 Q 0236 | 05 R 0181 |
| 03 C 0402 | 37 D 0565 |
| 63 N 0735 | 58 Q 03?1 |
| 79 L 0037 | 02 Y 0387 |
| 39 P 0616 | 90 Q 0?71 |
| 61 H 0818 | 45 S 0799 |
| 70 A 0859 | 05 Q 0773 |
| 21 C 0730 | 46 O 0792 |
| 30 H 0372 | 08 Z 0507 |
| 49 C 0898 | 01 A 0231 |
| 07 Q 0487 | 77 Q 0565 |
| 77 A 0242 | 32 B 0419 |
| 14 P 0291 | 08 C 02 7 |
| 60 B 0548 | 22 Y 0052 |
| 79 M 0676 | 93 K 0858 |
| 27 H 0711 | 51 F 0224 |

28 லங்கம் விவசாய இரசாயனப் பக்கெட்டுகள்.

| | |
|---|---|
| 82 P 0516 | 35 G 0212 |
| 25 V 0530 | 57 T 0611 |
| 56 C 0129 | 56 G 0054 |
| ?4 K 0455 | 04 D 0719 |
| 53 S 0178 | 11 G 0726 |
| 11 G 0851 | 15 C 0108 |
| 61 T 0152 | 51 P 0231 |
| 84 X 0932 | 71 D ?603 |
| 24 W 0157 | 28 D 0557 |
| 07 W 0088 | 14 K 0?22 |
| 47 L 0353 | 08 Y 0930 |
| 51 Z 0074 | 82 P 0666 |
| 51 W 0713 | 67 U 0250 |
| 54 Y 0128 | 14 P 055? |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

## மயிலியற்புலம்.....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

களை நிர்மாணித்து வள்ளி தேவசேனு சமேத ஸ்ரீ சுந்தப் பெருமானும் அகிலாண்டஈஸ்வரியான மகமாயி அம்பாளும் பிரதிஷ்டைசெய்யப்பட்டனர்.

தற்போது இத் திருத்தலப் மயிலியற்புலம் கந்தசாமி கோயில் பரிபாலன சபையாரால் நிர்வகிக்கப்பட்டு, நித்திய, நைமித்திய பூசைகளும், விசேட விழாக்களும் சிறப்பாக நடாத்தப்படுகிறது. இதனுல் இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்கள் வாய்ந்த புண்ணிய தலங்களைப்போன்று மிகச் சிறப்பானதாக விளங்குகின்றது.

1865ம் ஆண்டில் இந்த ஆலயத்தை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் 40 பேர் மூலம் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயம் தர்மசாசனம் செய்யப்பட்டு 7 பேர் கொண்ட ஓர் பராமரிப்புக் குழுவின்மூலம் நிர்வகிக்கப்பட்டுவந்தது ஆலயத்தின் நிர்வாகஅதிகாரம் பரவலாக்கப்பட்டு 1939ம் ஆண்டளவில் மீண்டும் ஒரு யாப்புமுறை ஆரம்பிக்கப்பட்டது.

விசேடஅம்சமாக 1950ல் வைரக்கல் பதிக்கப்பட்டது.

சுமார் 115 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த நிலையிலிருக்கும் இவ்வாலய வளர்ச்சி மிகவும் வியக்கத்தக்கது.

கடந்த மாதம் 28ம் திகதி ஆனிஉத்தரத்தில் இவ்வாலயத்தில் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது. 10ம் நாள் சண்முகப்பெருமான் தேரில் பவனிவரும் காட்சியும் மறுநாள் தீர்த்தோற்சவமும் 9ம் திகதி பூங்காவனத் திருவிழாவன்று அன்னதான வைபவமும் இரவு முருகப்பெருமானுக்கு திருக்கல்யாண வைபவமும் இடம் பெறும்.

உயர்ந்த கோபுரங்களாகவும் தாழாத உள்ளங்களாகவும் மனித இனம் வாழவும், ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கும், அவனே அருள்புரிய வேண்டும். அவனுறையும் ஆலயம் வளரட்டும்; அவன் பணிசெய்யும் நிர்வாகம் நீடூழி வாழட்டும்.

—கே. என். சாந்தகுமாரன்

# "பாடசாலைகளின் மேன்மை பெற்றோர், ஆசிரியரில் தங்கியுள்ளது"

(மாவிட்டபுரம்)

''பாடசாலைகளின் மேன்மை பெற்றோர்களும், ஆசிரியர்களும் இணைந்து சிறப்புறப் பணிபுரிவதில்தான் தங்கியிருக்கிறது. நமது மாணவ செல்வங்களின் எதிர்காலம் கருதி நமது பொருளையும், உழைப்பையும் பாடசாலைகளிலும் செலவிட்டு அவற்றைச்சிறந்த கல்விக்கூடங்களாக மாற்ற வேண்டும்.

இவ்வாறு வர்த்தலை விளான் அ.மி.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துரையாற்றிய இலங்கை தமிழர் ஆசிரிய சங்க உதவி செயலாளர் திரு. த பஞ்சலிங்கம் கூறினுர். அதிபர் திரு. சி. சின்னத்தம்பி தலைமையில் நடந்த இவ்விழாவில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்காவும், திரு இ. இராஜரத்தினம் தம்பதிகளுப் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

திரு டஞ்சலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்தால்தான் சிறந்த கல்விமான்களையோ, கலைஞர்களையோ, இலட்சியவாதிகளையோ உருவாக்கமுடியும்.

''தமிழ் மக்களைப்பொறுத்தவரை அரசினுல் தாம் புறக்கணிக்கப்பட்டு வருகிறோம். பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாமையால்நமது மாணவர்களது கல்விநிலை பாதிக்கப்படுகிறது. அத்துடன் தனியார் கல்வி நிலையங்கள் வளரவும் வழி ஏற்படுகிறது.

இதற்கு அர[illegible] காரணமாகவுள்ளது ஆகவே ஆசிரியர் பற்றுக்குறையை நிரப்ப[illegible] செய்து நமது மாணவர்களது கல்வி விருத்திற்கு வழிசமைப்பது அவசியமாகும்'' என்றுர்

# விரும்பிய பெண்ணைமணக்க பெற்றோர் மறுத்தனராம்!

## இளைஞன் தற்கொலை

(கிளிநொச்சி)

விரும்பிய பெண்ணை மணப்பதற்கு பெற்றோர் மறுப்புடத் தெரிவித்ததால் ஆத்திரமும், விரக்தியும் அடைந்த 22வயது இளைஞன் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இவ்வாறு மரணமானவர் பரந்தன் - குமரபுரத்தைச் சேர்ந்த பெரியசாமி இராசையா என்பவராவர். இம் மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி திரு எம். யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவைச்சேர்ந்த திரு எம். கணேசதுரை ஆஜர்செய்தார்.

காலமானவரின் தாய்திருமதி பொ. இலட்சுமி, சகோதரன் பெ. குலசிங்கம் ஆகியோர் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி திரு யோகலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (வெ)

# குரும்பசிட்டி அபிவிருத்தி சங்கம்

[யாழ்ப்பாணம்]

குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க புனரமைப்புக், கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத்தெரிவு தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி. கனகசுந்தரம் (அதிபர்) செயலாளர் திரு ஞா. ஸ்ரீமனோகரன், பொருளாளர் திருமதி ம. சின்னத்துரை, செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் மு. திருநாவுக்கரசு, சி. நடராசா, த. க. செல்லையா, மு. சுந்தரராசா, வ. கிருஷ்ணசாமி, துதிக்லைநடேசன், க. சிவதாசன் திருமதி சா. நடராசா என்போரும் தெரிவு செய்யப்பட்டனர். (மா)

# கடன்தொல்லை விவசாயிதற்கொலை

[கிளிநொச்சி]

கடன் தொல்லையால் மனமுடைந்து காணப்பட்ட விவசாயி ஒருவர் மனவிரக்தியடைந்த நிலையில் நஞ்சருந்தி மாணமானுர்.

இவ்வாறு மரணமானவர் சிவநகர் உருத்திரபுரத்தைச் சேர்ந்த சரவணமுத்து விநாயகமூர்த்தி என்பவராவர்.

இம்மரணம் சம்பந்தமான விசாரணை கிளிநொச்சிப்பகுதி மரணவிசாரணைஅதிகாரி திரு. மு. யோகலிங்கம்மேற்கொண்டார். சாட்சியங்களை கிளிநொச்சி ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவைச்சேர்ந்த திரு. எம். கணேசதுரை ஆஜர் செய்ததார்.

மரணமானவரின் மனைவி இலங்காதேவி, மகன் விஜயமூர்த்தி ஆகியோர் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கினுர். [வெ]

# "திறமையை மாணவர்கள் பயன்படுத்தவேண்டும்"

[கரவெட்டி, பச்சிலைப்பள்ளி]

'திறமை என்பது குறிப்பிட்ட மக்களுக்கோ குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்தவர்களுக்குகோ மாத்திரம்சொந்தமல்ல இயற்கை அனைவருக்கும் அளித்துள்ள திறமை• என்ற செல்வத்தைப் பயிற்சிமூலமே உலகிற்கு எடுத்துச்காட்டமுடியும்.'

இவ்வாறு யாழ். மாவட்ட பிரதம உடற்கல்வி கல்வி அதிகாரி திரு வே தங்கராசா உடுத்துறை மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

மகாவித்தியாலய அதிபர் திரு. க. வை. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் உடற்கல்வி அதிகாரி திரு. தங்கராசா மேலும் கூறியதாவது:-

'இயற்கை, அனைத்து இடங்களைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் திறமையைப்படைத்துள்ளது ஒருவரிடம் மறைந்து கிடக்கும் திறமையை வெளிக்கொணர வேண்டுமானல் அதற்குச் சிறந்த பயிற்சி வேண்டும். இங்கு நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பங்குகொண்ட மாணவர்களிடையே சிறந்த பயிற்சி இருப்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. ஆனுல் மாணவர்கள் இன்று நடைபெறும் விளையாட்டு போட்டியுடன் தமது பயிற்சியைக் கைவிட்டுவிடக்கூடாது. தொடர்ந்து உடற்கல்வியில் பயிற்சிபெற்றுக்கொண்டே இருக்கவேண்டும். இவ் வித்தியாலயத்திற்கு ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத போதிலும் அயலிலுள்ள திடலில் இப் போட்டியை நடத்தியமைக்காக ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாராட்டுகிறேன் என்ருர்.

பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் விழாவை ஆரம்பித்துவைத்தார். திருமதி சி. சச்சிதானந்தம் பரிசில்களை வழங்கினுர்.

## "பாடசாலைகளின் குறைகளை நீக்கி சிறுவர்களின் கல்வி விருத்திக்கு உதவவேண்டும்"

### வட்டு. எம். பி. கூறுகிறுர்

(மாவிட்டபுரம்)

'நமது மத்தியிலுள்ள ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒவ்வொரு குறைபாடுகள் உண்டு. குறைபாடுகள் இல்லாத பாடசாலைகள் இல்லையென்றே கூறிவிடலாம். இக் குறைபாடுகளை நீக்கி எமது சிறுர்களது கல்வி விருத்திக்காக உதவவேண்டியது நமது கடமை.'

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் பேசிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கூறினுர்.

அதிபர் திரு. மு. வடிவேலன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'பாடசாலைகளின் குறைபாடுகளை அறிய அண்மையில் எனது தொகுதியில் ஒரு கலந்துரையாடலை நடத்தினேன். எனது தொகுதியிலுள்ள 52 பாடசாலை அதிபர்கள் அதில் கலந்துகொண்டு தமது பாடசாலைகளின் குறைபாடுகளைத் தெரிவித்தனர். ஒவ்வொரு பாடசாலையிலும் குறைபாடுகள் உள்ளன. அரசாங்கம் விடும் தவறுகளால்தான் இக் குறைபாடுகள் மேலும் மேலும் வளர்கின்றன.

'இவற்றையெல்லம் எம். பி.க்களாகிய நாம் தீர்த்துவைத்துவிடமுடியாது. முடிந்த அளவில் நாமும் உதவிசெய்வோம்.

'பெற்றோர், ஆசிரியர், நலன் விரும்பிகள் யாவரும் ஒன்றுபட்டுப் பரந்த மனப்பான்மையுடன் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக உழைக்கவேண்டும்' என்றுர்.

அபிவிருத்திச் சபையால் கடந்த ஆண்டு இவ்வித்தியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகள் குறித்தும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. [வெ]

## "கிளிநொச்சியின் அபிவிருத்திக்கு அயராது உழைப்பேன்"

### பிரதேச சபைத்தலைவர் கூறுகிறுர்

(கிளிநொச்சி)

"'கல்வி, அபிவிருத்தி, வேலை வாய்ப்புத் துறைகளில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள கிளிநொச்சி பிரதேசத்தை விரைவில் அபிவிருத்திசெய்ய இத்தொகுதி எம். பி யுடன் சேர்ந்து அயராது பாடுபடுவேன்'

இவ்வாறு கிளிநொச்சி பிரதேச சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. ன். சுப்பிரமணியம் தெரிவித்தார்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர்கே. சுப்பிரமணியம் தலைமையில் நகர மண்டபத்தில் நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலில் தெரிவாகிய பின்பு கிராமோதய சபைத் தலைவர்கள், அதிகாரிகள் மத்தியில் திரு. சுப்பிரமணியம் உரையாற்றினுர். இப்பகுதியின் பதினெரு கிராமோதய சபைத் தலைவர்களும் இத் தேர்தலின்போது சமுகமளித்திருந்தனர்.

திரு. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில்:- இப்பகுதியின் தேவைகளையும் குறைபாடுகளையும் நான்நன்கு அறிந்தவன். எனது பதவிக் காலத்தில் பிரதேச சபைத் தலைவர்களுக்கான முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி இப்பிரதேசத்தை எவ்வித பாகுபாடும் இன்றி மறுமலர்ச்சி அடையச் செய்வேன் என்றுர்.

## பாடசாலைகளில் திருத்த வேலைகள்

(கரவெட்டி)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் திருத்தவேலைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை யாழ். கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கல்வி அமைச்சு வழங்கியுள்ள 50 லட்சம் ரூபாவில் இருந்தே இத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், திருத்தவேலைகள் கூடுதலாக கல்லூரிகள், மகாவித்தியாலயங்களிலேயே நடைபெறுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## குடும்பப் பிரச்னை கணவன் தற்கொலை

[மாவிட்டபுரம்]

குடும்பப்பிரச்னைகளால் மனமுடைந்த நபர் ஒருவர் நஞ்சருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார். உடுவிலைச்சேர்ந்த வேலன் முருகன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு நா. தம்பிராசா தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினுர். சுன்னுகம் பொலிஸ் கான்ஸ்டபிள் ச. பொன்னுத்துரை சாட்சியை ஆஜர்செய்தார்.

## 'நிஸ்கோ' பிரிவு பணிப்பாளர் தெரிவு

(கரவெட்டி)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட 'நிஸ்கோ' பிரிவிற்கான பணிப்பாளர்களைந் தெரிவு செய்வதற்கான தேர்தல் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

8பேர்வேட்பாளராக போட்டியிட்ட இத்தேர்தலில் திருவாளர்கள் ஐ தேவராசன்(நெடுந்தீவு), க. சிவப்பிரகாசம்(சாவகச்சேரி), பெ பூபாலசிங்கம் (பருத்தித்துறை), செல்வி வ. கமலேஸ்வரி [சாவகச்சேரி) ஆகிய நால்வரும் 'நிஸ்கோ' பிரிவின் பணிப்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டனர். இத் தேர்தலுக்கு தேர்தல் அலுவலர்களாக கூட்டுறவுப் பரிசோதகர்களான திருவாளர்கள்: பி கணேசலிங்கம், பி,சிவலிங்கம் ஆகியோர் கடமையாற்றினுர்கள். தேர்தல் முடிவில் 'நிஸ்கோ' பிரிவின் யாழ். மாவட்ட முகாமையாளர் செல்வி. எஸ். மகேஸ்வரிநன்றி கூறினுர்.

## ரூபா 15,000 கொள்ளை

(பலோலி)

இரவு வேளையில் வீட்டிற்குள் புகுந்த திருடர் கோஷ்டி அங்கிருந்த தங்க நகைகள், மணிக்கூடுகள் உட்பட சுமார் 15,000 ரூபா பெறுமதியான பொருட்களைச் சுருட்டிச்சென்றுள்ளது,

கரணவாய் தெற்கைச் சேர்ந்த பா. சதாசிவம் என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டுக்காரர்கள் நித்திரையிலிருக்கும்போது வீட்டினுள் புகுந்த திருடர்கோஷ்டி மேசைமீது வைக்கப்பட்டிருந்த அறைத்திறப்பை எடுத்து அறையைத்திறந்து சங்கிலி, காப்பு, மோதிரம், மணிக்கூடுகள் என்பன உட்பட சுமார் 15.000 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றதாகப் பருத்தித்துறைப்பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## "கட்டுப்பாடுடன்செயல்பட்டவர் அருந்தவராஜா"

(புலோலி)

'அருந்தவராஜா 1973-ம் ஆண்டு தொடக்கம் பொலிஸ் சேவையில் சேர்ந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செயல்பட்டவர் இவர் கொழும்பு, யாழ்ப்பாணம், சுன்னுகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி மக்களின் பாராட்டைப்பெற்றவர்.'

இவ்வாறு யாழ். பொலிசைச் சேர்ந்த திரு. நவரத்தினம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நெல்லியடிச் சந்தியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மரணமான பொலிஸ் கான்ஸ்டபிள் அருந்தவராசாவின் இறுதிக் கிரியைகளின்போது உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், 'இவரது இழப்பு பொலிஸ் திணைக்களத்திற்குப் பேரிழப்பாகும்' என்றுர்.

## மாங்குளம் சந்தியில் வாகனங்கள் சோதனை!

[துணுக்காய்]

நெல்லியடி வன்செயல் சம்பந்தமாக மாங்குளம் பொலிசாரும் இராணுவத்தினரும் இப்பகுதியில் திடீர்ச் சோதனையை மேற்கொண்டுவருகிறுர்கள்.

மாங்குளம் சந்தியில் இராணுவ கவசவாகனங்கள் நடுவீதியில் நிறுத்தப்பட்டு முல்லைத்தீவு, துணுக்காய், பாண்டியன்குளம், கண்டி வீதி ஆகிய வீதிகளால் வந்த வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுப் பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

அடுத்து மினிபஸ், இ. போ. ச. பஸ் வண்டிகளில் பிரயாணம்செய்த பொதுமக்களின் பெட்டிகள், உடைமைகள் அனைத்தும் கடும் சோதனைக்குள்ளாகியது [க]

## பொதுமக்களால் பிடிக்கப்பட்ட சந்தேகநபர்களுக்கு 12 வரை ரிமாண்ட்

(மாவிட்டபுரம்)

குற்றச்செயல்களில் ஈடுபட முயன்றதாக பொதுமக்களால் பிடித்து பொலிசில் ஒப்படைக்கப்பட்ட 3 சந்தேக நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு இப் மாதம் 12-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

வசாவிளானில் பிள்ளையினுர் அப்புத்துரை என்பவரது வீட்டினுள் போலித்துப்பாக்கியுடன் கொள்ளையிடும் எண்ணத்துடன் சென்ற சமயம் பொதுமக்களால் பிடிக்கப்பட்ட வேலுப்பிள்ளை சற்குணராஜா என்பவருக்கும், மயிலிட்டியில் கதிர்காமு சண்முகலிங்கம் என்னும் வைத்திய அதிகாரியின் வீட்டில் திருட்டுக்கு வேவு பார்க்க வந்த சமயம் பொதுமக்களால் பிடிக்கப்பட்ட செல்வரத்தினம் பாலச்சந்திரன் என்பவரும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் செல்லத்துரை தங்கம் என்பவரது தங்கச் சங்கிலி திருடப்பட்டது தொடர்பாக பொதுமக்களால் பிடித்து ஒப்படைக்கப்பட்ட குறவர் கூட்டத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவனும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் மூவரையும் இம் மாதம் 12-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

## வாள்வெட்டு மூவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியைச் சேர்ந்த மூவர் வாள்வெட்டுக்கிலக்காகி பலத்த காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராசன், கணேசன், கே. மாணிக்கம் ஆகிய மூவருமே வாள்வெட்டுக்கிலக்காகியவர்களாவர் பழைய பகையே இச்சம்பவம் ஏற்படக் காரணமெனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (மா)

## சாரணர் பாசறை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி முதலாம் சாரணிய பிரிவின் தலைவியும், சென்திரேசா மகளிர் கல்லூரி அதிபருமான செல்வி ராதா சோமசுந்தரம், சிறுதோழர் பிரின் தலைவி திருமதி எவ். எஸ். வின்சென்ற் ஆகியோரின் தலைமையில் மல்லாவி கிராமத்தில் சாரணர் பாசறை அமைத்து பல பணிகளிலும் முப்பத்தைந்து சாரணிய மாணவர்கள் ஈடுபட்டனர்.

## பாராட்டுவிழா

[கிளிநொச்சி]

பூநகரிப்பகுதி விசேட சேவை அதிகாரி திரு. செ. சிவபாலனின் சேவையை கௌரவித்து கிராஞ்சி செந்தாரனக விளையாட்டுக்கழகத்தினர் பாராட்டு விழாவொன்றை நடத்தினுர்கள்.

இக்கழகத்தின் தலைவர் திரு. செ. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கிளிநொச்சி எம். பி. யின் செயலாளர் திரு. இ. கிருஷ்ணராசா, பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் ஆகியோர் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டனர்.

## பலியிடுதல் என்றுல் என்ன! திருச்சபைப்போதகர் விளக்கம்

(அரியாலை)

'இறைவனுக்கு தமது நன்றியைச் செலுத்துவதற்காக ஆதிகாலமக்கள் பலிசெலுத்தினுர்கள். ஆபிரகாம் தனது ஒரேமகனைக்கூட இறைவனுக்குப்பலியாகச் செலுத்தமுன் வந்தான். காலஞ்செல்லப் பலியிடுதலில் ஏற்பட்ட மாற்றத்தினுல் இறைவனுக்கு மக்கள் தமது முதற்பேருன பலனைப் படைத்து நன்றி செலுத்தினுர்கள். அந்தப் பழக்கம் அன்றுதொட்டு இன்றுவரை நிலவிவருகிறது''.

இவ்வாறு சேவர் அருட்திரு சாம் அல்பிரட் அடிகளார் நல்லூர் யரிசுத்த யாக்கோபு ஆலயத்தில் நடைபெற்றதோத்திரபலிஆராதனையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண அர்ச்டிக்கன் அருட்திரு சாம் டி. ஹோர்சிங்டன் அடிகளாரால் ஆராதனை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இறைவன் எமக்குக் கொடுத்த சகல ஈவுகளுக்காகவுமே நாம் நன்றி செலுத்துகிறேம். தமது விளைநிலங்களில் விளைந்த விளைச்சலின் முதற்பலனையும், தமது மிருகஜீவன்களின் முதற்பலனையும் படைத்து இறைவனுக்கு நன்றி செலுத்தினுர்கள். எமது பாவங்களுக்கும் தம்மைச் சிலுவை மரத்துக்கும் ஒப்புக்கொடுத்துத் தன்னையே மாய்த்து மாண்டு உயிர்த்தெழுந்த இறைமகனுக்கு நாம் எமது தோத்திரங்களோடு எமது முதற்பேருன் பலன்களைப் படைத்து நன்றி செலுத்துவோமாக', என்று அல்பிரட் அடிகள் குறிப்பிட்டார். (அ)

## பொங்கல் விழா

(கிளிநொச்சி)

இராமநாதபுரம் மாவடி மாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. புலவர் ஈழத்துச் சிவானந்தன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனி-கமல்-ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு
[புதிய பிரதி

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
சட்டம் என்கையில்

# கிரிக்கட் : இரு போட்டிகளில் சென்ஜோன்ஸ் வெற்றி

(அரியாலை)

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 17வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிகட் போட்டியில் பரி. யோவான் கல்லூரி இனிங்சால் வெற்றியீட்டியது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 3 விக்கட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றுத்தனதுஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இக்கோஷ்டியைச்சேர்ந்த கதிர்காமநாதன், நிசாந்தன் ஆகியோர் முறையே 67, 42 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய லங்கேஸ்வரன் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளைப் பெற்றார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையுமிழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியைச் சேர்ந்த உதிஷ்ரன், ஜே. மணிவண்ணன், ஆகியோர் 29, 18 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்து பந்துவீசிய பி திருக்குமார், 15 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளையும், எஸ் எஸ். ஆனல்ட் 3 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் பெற்றனர்,

இதனைத் தொடர்ந்து தனது இரண்டாவது ஆட்டத்தை ஆரம்பித்த மானிப்பாய் இந்துக் கல்லூரி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியைச்சேர்ந்த பாலகிருஷ்ணன், ஜே மணிவண்ணன் ஆகியோர் முறையே 20, 17ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய எஸ். எஸ். ஆனல்ட் 25 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளையும், பி. திருக்குமார் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும், பாட்லட் 6 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்

போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### மத்திய கல்லூரியுடன்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டவர்களுக்கு 'ஏ. பிரிவுக் கிரிக்கட் போட்டியில் பரி. யோவான்கல்லூரிக் கோஷ்டி இனிங்சாலும் 11 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய பரி யோவான் கல்லூரிக் கோஷ்டி எல்லா விக்கட்டுகளையுமிழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியைச் சேர்ந்த ஜீ. பி. ஜெயவீரசிங்கம் 56 ஓட்டங்களையும் பி. ஜே. ஆர். சின்னையா 10 நிமிடங்களில் 33 ஓட்டங்களையும் பெற்றார். இவர்களை எதிர்த்துப்பந்து வீசிய நியூட்டன் 56 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைக் கைப்பறினார்.

இதனைத்தொடர்ந்து தனது முதலாவது ஆட்டத்தை ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது இக்கோஷ்டியைச் சேர்ந்த திரு மோகன் ஜெயக்குமார் ஆகியோர்ர் முறையே 24, 20 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசியகே. அகிலன் 33 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளையும் ஜே. ஏ. ஆனந்தராஜன் 16 ஓட்டங்களுக்கு விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ். மத்திய கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டியைச் சேர்ந்த கருணைராஜ் 27 ஓட்டங்களைப்பெற்றார். இவர்களை எதிர்த்துப்பந்து வீசிய கே. அகிலன் 17 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளையும் ஜே. ஏ. ஆனந்தராஜன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர். கே. அகிலன் 4 முறை பந்துகளை வீசி 3 விக்கட்டுகளை ஒரு ஓவரில் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

[அ]

ராணி (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
முத்துராமன்-ஜெயலலிதா நடித்த
சூரிய காந்தி

ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 4காட்சிகள்
கடைசி வாரம்
✶ ரஜனிகாந் ✶ சுஜாதா ✶ விஜயன்
✶ கராத்தே மணி ✶ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 2-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
3-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்கா, ஜெயபாரதி
மோகனப் புன்னகை
(கலர்)

Windsor (Jaffna) 2nd Crowded Week
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி வாரம்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30, 6-30, 9-45
7-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா, தங்கவேலு, நாகேஷ்.
கடல் மீன்கள்
—கலர்—

## மீனுக்குத் தட்டுப்பாடு

(நெடுந்தீவு)

தற்பொழுது சீரற்ற காலநிலை நிலவுவதால் நெடுந்தீவு மீனவர்களின் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இங்கு மீனுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் விலைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. (கு)

# 'சிறந்த குணமுடையவர் சமுதாயத்தில் சிறப்படைவர்'

[அரியாலை]

''சமுதாய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு உழைக்கும் மகாசபை சமூகத்திலிருக்கும் ஏழை மாணவர்களுக்குக் கல்வி உதவியளித்து அவர்களைக் கல்வி கற்க வழிநடத்துவதுடன் சமூகத்தில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளிடையே பேச்சு, கட்டுரை, திருக்குறள் மனனப் போட்டிகளை வருடா வருடம் நடாத்தி வருவது பாராட்டுதற்குரியதாகும்''

இவ்வாறு மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா கோண்டாவிலில் நடைபெற்ற அகில இலங்கை வள்ளுவர் மகாசபையின் 32-வது வருடாந்த மகாநாட்டின் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

அமரர் கதிரேசு அரங்கில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் திரு, தம்பி ஆனந்தனின் வரவேற்புரையைத் தொடர்ந்து திரு. க. கனகராசா தொடர்ந்து பேசுகையில் 'இளமையிலே சிறந்த குணநலங்களை யுடையவர்கள் தான் சமுதாயத்தில் சிறந்த பிரஜைகளாக வளரமுடியும். அவர்களால்தான் சமுதாயத்தைக்கட்டி வளர்க்க முடியும் என்று கூறினார்.

போட்டிகளில்வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை திரு. க. கனராசா வழங்கினார்.

'பிறப்புச் சான்றிதழில்

# தொழிலைக் குறிக்கும் சாதிப்பெயர் ஒழிக்கப்படும்''

## - யாழ். அரச அதிபர்

[அரியாலை]

'சாதி பேதங்கள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்று சொல்லப்படும் இக்காலத்தில் தொழிலைக்குறிக்கும் சாதியின் பெயர்கள் பிறப்புச்சாட்சிப் பத்திரங்களில் இடல்பெறுவது தவிர்க்கப்படவேண்டும் இவ் விஷயத்தையும், வள்ளுவ சமூகத்து மக்களுக்கு விசேட சலுகையின் அடிப்படையில் வேலை வாய்ப்புக்கள் வழங்குவது பற்றிய விஷயத்தையும், யாழ் அபிவிருத்தி சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்து அதன் அங்கீகாரத்துடன் ஆவன செய்வேன்.''

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, கோண்டாவிலில் நடைபெற்ற அகில இலங்கைத் திருவள்ளுவ மகாசபையின் 32வது வருடாந்த மகாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

யோவெல் போல் அரங்கில் மகாசபைத்தலைவர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை முன்னாள் செயலாளரும், முன்னாள் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி பேசுகையில் ''நான் அரசாங்க அதிபராகப்பணியாற்றிய குறுகிய காலத்தில் வடமாகாணத்தின் அபிவிருத்தியை மனதில் கொண்டு செயல்பட்டேன். அக்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களில் ஆயிரக் கணக்கானோர் வேலைவாய்ப்புப் பெற ஆவன செய்தேன். அந்த வகையில் வள்ளுவர் மகா சபையின் வேண்டுகோளை ஏற்று பத்தொன்பது பேருக்கு மின்சாரப்பகுதியிலும், புகையிரதப்பகுதியிலும் வேலைவாய்ப்புப் பெற உதவிசெய்தேன். இதனை மனதில் கொண்டு இன்று நான் பதவியிலிருந்து இளைப்பாறியபின்னரும்என்னை அழைத்துள்ளீர்கள்'' என்றார்.

''ஒடுக்கப்பட்ட மக்களின் வழிபாட்டிற்காக இன்றும் எத்தனையோ ஆலயங்கள் திறந்து விடப்படாமல் இருப்பதை அறிந்து நானும் ஒரு இந்து என்ற வகையில் வெட்கமடைகிறேன். இவ்விஷயத்தை நான் தலைமைப்பதவி வகிக்கும் இந்துப் பரிஷ் இயக்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து ஆவனசெய்வேன்'' என்றும் அவர்கூறினார்.

காலை நடைபெற்ற பேராளர்மகாநாட்டில்செய்யப்பட்ட தீர்மானங்களை நிர்வாகச்செயலாளர் திரு. எஸ், தணிகாசலம் பொதுக்கூட்டத்தில் பிரகனப்படுத்தினார். பொதுச்செயலாளர் திரு. கே. கிருஷ்ணராசாவின் வரவேற்புரையைத் தொடர்ந்து திருவாளர்கள்: எஸ். சிவதாசன், எஸ். தில்லைநாதன், ஆ. திரவியநாயகம், எஸ். வாமதேவன், இளைப்பாறிய நில அளவையாளர் திரு. வே. ஞானரத்தினம் ஆகியோர் பேசினார்கள்.

கோப்பாய்க் கிளைத்தலைவர்: திரு இ. கோபாலசிங்கம் நன்றி தெரிவித்துப்பேசினார்,

[அ]

## இரு பிரிவுகளிலும் முதலிடம்

(நெடுந்தீவு)

ஆங்கில தினப் போட்டியில் நெடுந்தீவு மகா வித்தியாலயம் இரண்டு பிரிவுகளுக்கான நாடகப் போட்டியில் இரண்டு பிரிவுகளிலும் முதலிடம் பெற்றது. புங்குடுதீவு வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் ''வெனிஸ் நகர வணிகன்'' ''வில்லியம் ரெல்'' ஆகிய இரு ஆங்கில நாடகங்களையும் மேற்படி போட்டிக்கென நெடுந்தீவு மகாவித்தியாலயம் அனுப்பி வைத்திருந்தது.

நாடகத்தை வித்தியாலய உதவி அதிபர் திருமதி பி எம். ஜே. அன்ரனி, திருமதி நிர்மலாதேவி ஜெயராசா ஆகியோர் இயக்கினர்.

## கஷ்டம்

[கிளிநொச்சி]

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திசபையின் கரைச்சி உபசபையால் நடாத்தப்படும் எட்டாம் வாய்க்கால் காந்தி நிலைய இலவச ஆயுர்வேத் வைத்தியசாலையில் போதிய மருந்து இல்லாமையினால் நோயாளர்கள் மிகவும் கஷ்டமடைகின்றனர். இவ்வருடத்திற்கான மருந்துகள் இதுவரை இவ்வைத்தியசாலைக்கு வந்து சேராததுதான் இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

## மாதிரிக் கிராமம் தெரிவு

யாழ்ப்பாணம்)

இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தினரால் வேலணை மூன்றாம், நாலாம் வட்டாரப்பகுதிகள் மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதிரிக் கிராமத்திற்கு பொறுப்பாளராக வேலணை கிழக்கு மாதர்கிராமமுன்னேற்றச் சங்க தலைவி திருமதி பத்மாவதி திருஞானச் செல்வம் தெரிவானார். இம்மாதிரிக் கிராமத்தில் ஆரம்பத்தில் பாலர் பாடசாலை, சுகாதாரப் பிரிவு, குடும்ப நலப்பகுதி ஆகியன இயங்கும், இத்திட்டம் வெற்றியளிக்கப்படும் பட்சத்தில் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

(கிளி-நி

# கூட்டுறவுத் தவறணைமுறை முல்லைத்தீவிலும் அமுல்!

(யாழ்ப்பாணம்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் கூட்டுறவுத் தவறணைமுறை இம்மாதம் தொடக்கம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. கே. நடராசா எடுத்த நடவடிக்கையின் பயனாக முல்லைத்தீவு மாவட்டத்திலும் கூட்டுறவுத் தவறணைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 தவறணைகளில் பிரதான 3 தவறணைகள் கூட்டுறவு அமைப்புக்குக்கீழ் இப்பொழுது கொண்டுவரப்பட்டதாகும். இந்த மூன்று கூட்டுறவுத் தவறணைகளும், வடமாகாண தெ. ப. உ. வி. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்புமுறையின் கீழ் முகாமையாளர், லிகிதர், காசாளர், விற்பனையாளர் முதலான தரங்களில் அம்மாவட்டத்திலுள்ள 45 படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. அத்துடன் சுமார் 500 சீவல் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

பனம் பொருள் அபிவிருத்தி சபை இச்சங்கத்துடன் ஒருங்கிணைந்து பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உள்ளதென்றும் தெ. ப. உ. வி. கூட்டுறவுச்சங்க சமாஜ செயலாளரும் பனம் பொருள் அபிவிருத்திசபைத் தலைவருமான திரு. நடராசா தெரிவித்துள்ளார். (மா)

## விஞ்ஞானக் கருத்தரங்கு

(கோப்பாய்)
கோப்பாய் கல்வி வளநிலையம் க. பொ. த. வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞான கருத்தரங்கை இன்று தொடக்கம் ஐந்து நாட்களுக்கு நடத்துகின்றது. அச்சுவேலி, உரும்பராய் இந்துக்கல்லூரி கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, வசாவிளான் ம. ம. வி. ஆகிய 5 பாடசாலைகளில் இக் கருத்தரங்கு நடைபெறும். இந்த ஐந்து நிலையங்களிலும் அண்மையில் உள்ள பாடசாலைகள் மொத்தம் 19 பங்கு கொள்ளும், இக்கருத்தரங்குகளில் யாழ். மாவட்டசேவைக்கால விஞ்ஞானகல்வி ஆலோசகர்கள் திரு. ஐ ஜெகநாதன், திரு. வை. சச்சிதானந்தம், திரு. சி. அம்பிகாபரன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்.

# காரைநகரில் கரை ஒதுங்கிய சடலம்

(காரைநகர்)
காரைநகரைச் சேர்ந்தஊரிக் கடற்கரையில் இனந்தெரியாத ஆண் சடலமொன்று ஒதுங்கியுள்ளது.

சுமார் 25 வயது மதிக்கக் கூடிய இச்சடலம் கறுப்பு நிறமும் ஹிப்பித்தலையுடனும் ஆடைகள் எதுவுமின்றியும் காணப்படுகின்றது. இது சம்பந்தமாக ஊரிக்காடு கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் ஐ பரமு யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறைப் பொலிசாருக்கும் காரைநகர் கிழக்குக் கிராமசேவையாளருக்கும் அறிவித்துள்ளார். (ஃ)

## தமிழீழத்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கருத்துக்களுக்கு விரிவாகவிளக்கம் அளித்த திரு. அமிர்தலிங்கம், சில உதாரணங்களை மேற்கோள்காட்டி கூட்டணியின் இன்றைய நிலை அது எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள், எதிர்காலத்தில் கூட்டணி செயல்படவிருக்கும் வழிமுறைகள் பற்றியும் தெளிவுபடுத்தினர்.

ஈழத்தின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனையபகுதிகளில் உள்ள மக்களை வடக்கு, கிழக்கில் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதுடன், பொருளாதாரத் திட்டங்களும் வகுக்கப்படவேண்டும். தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு முதலில் சர்வதேச ஆதரவு பெற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்'' என்று மகாநாட்டில் கோரிக்கைவிடுத்த திரு. அமிர்தலிங்கம்;

''ஈழத்தில் தமிழ் மக்கள் எத்தனை துன்பத்தின் மத்தியில் வாழுகின்றனர் என்பதை நான் இங்கு விரிவாக்கத் தேவையில்லை. ஈழத்தில் வாழும் தமிழ் மக்களின் உயிருக்கு நான்தான் பொறுப்பு. அதேநேரத்தில் எமக்கு முன்பாக உள்ள பாரிய பொறுப்பினையும் மறந்துவிடமுடியாது. வெறும் உணர்ச்சியோடு மட்டும் இயங்காமல் பொறுப்பற்ற விதத்தில் செயல்படாமல், எமது இலட்சியத்தை அடைய திட்டமிட்டு செயல்படவேண்டும்,' என்றார்.

''ஈழக் கொள்கையை இலங்கை அரசுக்கு விற்றுவிட்டதாகக் குற்றம் சுமத்துகின்றார்கள். கண்டிப்பது சுலபம். எமக்கு கல்லெறிய நினைப்பவர்கள், எங்களது நிலையை அவர்கள் 'நிலையில் வைத்துப் பார்க்க வேண்டும். கதிரைகளில் இருந்து பேசுவதைக் கைவிட்டு; எங்கள் நிலையை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்'' என்று கூறிய திரு. அமிர்தலிங்கம்:

''தமிழ் மக்கள் என்மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனாலும் தமிழ் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டேன் என்று எப்பொழுது கருதுகின்றேனோ அந்த நிலைமை உருவாகும் பட்சத்தில், அன்றே நான் கீழிறங்கி; தமிழ் மக்கள் கருதும் நம்பிக்கையானவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிடுவேன்'' என்றும் திரு. அமிர்தலிங்கம் பொறுமையுடன் கூறினர்.

### அமிர் பேச்சு பாராட்டு

மகாநாட்டில் கலந்துகொண்டவர்கள், திரு. அமிர்தலிங்கத்தின் உரையைப் பெரிதும் பாராட்டி, வரவேற்புத்தெரிவித்தனர். எதிர்ப்புகள் மத்தியிலும் சாதுரியமானமுறையில திரு. அமிர்தலிங்கம் உரையாற்றி மகாநாட்டுப்பேராளர்களை கவர்ந்து தமிழ் மக்களின் ஐக்கியத்துக்கு மேலும் வலுவூட்டினார் என்றும் மகாநாட்டு பேராளர்கள் கருத்துவெளியிட்டனர்


## தேவை

யாழ் / தனியார் வைத்தியசாலைக்கு
பின்வரும் வெற்றிடங்களுக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(I) மேற்பார்வையாளர் [Supervisor]
(II) காரியாலய சேவகன் [Office Peon]
(III) பயிற்றப்பட்ட தாதியர் [Trained Nurses]
(IV) பயிற்சி பெறவேண்டிய தாதியர் [Trainee Nurses]
(V) பயிற்சி பெறவேண்டிய மருந்தாளர் [Trainee Dispensar]

[இரசாயன பாடத்தில் சித்தியும்,
ஆங்கில அறிவும் முக்கியம்]

மேற்கூறிய பதவிகளிற்கான விண்ணப்பங்கள் யாவும் தமது கல்வித் தகமை, மேலதிக தகமைகளுடன்
12-07-1982 க்கு முன்னர்

காரியகரிசி,
395, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
3766


## மரண அறிவித்தல்
### ப்பிரம்மஸ்ரீ ஜெ. நாகேஸ்வரசர்மா

நல்லூர் ஸ்ரீநிரஞ்ஜன அச்சக உரிமையாளரும் ''இந்து' சமய சஞ்சிகை ஆசிரியருமான மகேசன் என அழைக்கப்படும் ப்பிரம்மஸ்ரீ ஜெ. நாகேஸ்வர சர்மா காலமானார். இவர் ச. ஜெகநாதசர்மா, சொர்ணம்பிகை தம்பதிகளின் மூத்த புதல்வரும், இ. நாகேஸ்வரராணி, ஜெ. எஸ். சர்மா ஆகியோரின் சகோதரரும், சி இரவீந்திரசர்மா (திருகோணமலை) கச்சேரி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்) அவர்களது மைத்துனரும், பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் (யாழ் பல்கலைக் கழகம்), கா. இரத்தின கைலாசநாதக் குருக்கள் (முனீஸ்வர தேவஸ்தானம்) ஆகியோரின் மருமகனுமாவார். இறுதிக் கிரிகைகள் செம்மணி மயானத்தில் இன்று (6-7-82) காலை நடைபெறும்.

ஸ்ரீ நிரஞ்ஜன அச்சகம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
6-7-1982 3769

# இப்படியும் நடக்கிறது

கொழும்பு நகரில், பேராசிரியர் நந்தசேன ரத்னபால மிகவும் சிரமப்பட்டு ஒரு மதிப்பீடு எடுத்துள்ளார்.

கொழும்பு நகரமக்கள் தொகை: 5 லட்சத்து 85, 776. இதில் ஆண்கள் 5, 25, 192.

நாலாயிரம் முதல் ஐயாயிரம் பேரில் மேகநோய் காணப்படுகிறது.

தினசரி முந்நூற்றுப்பதினேழு பெண்களுக்கு கருச்சிதைவு நடக்கிறது.

× + + ×

கிம்புலேலயில் நடைபெற்ற கம் உதாவ - 82 சிட்டிழுப்பு கண்காட்சியை, பத்துலட்சத்து பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கண்டுகளித்துள்ளனர்.

இவ்வளவு பெருந்திரளானவர்கள், கடைசியாக காலஞ்சென்ற பிரதமர் திரு டட்லி சேனநாயகாவின் மரணச் சடங்கின் போது மட்டுமே காணப்பட்டனர்!

'ஊடுருவி'

## தமிழ் ஈழ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
வெற்றி அளித்திருக்கிறது என்றும், தமிழ் மக்களின் ஐக்கியம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் ஐக்கியத்துடன் ஒற்றுமையாக இங்கு செயல்பட்டுள்ளனர் என்றும் பெரும் திருப்தியும் மகிழ்ச்சியும் தெரிவித்தனர்.

## பதில் நீதவான்

(புலோலி)
பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கே. எஸ். மகேசன் காலமானதைத் தொடர்ந்து, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி டி. ராசநாயகம் பதில்நீதவானகக் கடமையாற்றுவார்.

உ
சிவமயம்

## இரண்டாவதாண்டு நினைவஞ்சலி

06-07-1982



கோயிலாக்கண்டி
செல்வன் சிவசுப்பிரமணியம் சாந்திநிகேதன்
(சாந்தன்)

மண்ணகம்: 03 - 02 - 1955
விண்ணகம்: 29 - 06 - 1980

கண்ணனாய் கண்ணொளிசேர் காட்சி யானாய்
கற்பகத்து நறுமலராய்க் கமழ்ந்து நின்றாய்
பண்ணனாய் பாட்டானாய் பவள வாயால்
படர்துன்ப இடர்களையும் பாலன் ஆனாய்
புன்னகை எம்மிதயம் பொங்கி வேகப்
புகலிடமாய் ஈராண்டின் முன்னே நீயோ
அண்மியருள் இறையடிசேர் நாளாமின்றே
அஞ்சலியால் நின்நினைவை ஆற்றுவோமே!

தந்தைதாயார், சகோதரசகோதரிகள்,
மைத்துனர், மருமகள், உற்றார், அயலவர்,
நண்பர்கள்.
'எபநேசர்'
நாயன்மார்கட்டு. [3763]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஜூலை மீ 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.